326

# குமரிமலர்

பதிப்பாசிரியர்

ஏ.கே.செட்டியார்

50 காசு

# The India Leather Corporation Ltd.

PREMIER EXPORTERS OF
E. I. TANNED HIDES, KIPS & SKINS

- Kips (Cow Hides)
- Cowcalf Skins
- Buffalo Hides
- Buffcalf Skins
- Goat Skins
- Sheep Skins


9, DAVIDSON STREET
G. P. O. BOX - 1516
MADRAS - 1

# தி இந்தியா லெதர் கார்ப்பொரேஷன் லிமிடெட்

9. டேவிட்ஸன் தெரு
தபால் பெட்டி — 1516
சென்னை - 1

Phone 4491:
2059

Grams : "TANDRIGHT"




பொரபுதூரிலுள்ள தியான புத்தர்.

## எம். கே. கிருஷ்ண செட்டியார்

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்.

# ANNOUNCEMENT.



## "TEXTOOL"

**TAKES PRIDE TO ANNOUNCE THAT THEIR 4 CYLINDER 36 To 86 H. P. AUTOMOTIVE DIESEL ENGINES**

will be out in the market Soon!!

Await Further News !!!

MANUFACTURERS:-

**Textool Company Limited,**

**Post Box No. 221,**

COIMBATORE.

**Phone:** 409 1409

**Gram:** 'TEXTOLCO'

Statement about ownership and other particulars about newspaper KUMARI MALAR

FORM IV

| | |
|---|---|
| 1. Place of Publication: | Madras |
| 2. Periodicity of its Publication: | Monthly |
| 3. Printer, Publisher & Editor | A. K. Chettiar |
| Nationality: | Indian |
| Address: | 100, Mowbrays Road<br>Madras-18 |
| 4. Name and address of individual who owns the newspaper. | A. K. Chettiar<br>Sole Proprietor<br>100, Mowbrays Road<br>Madras-18 |

I, A. K. Chettiar, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 25-3-1959

A. K. Chettiar
Publisher

மலர் 15 குமரிமலர் இதழ் 12

விளம்பி - பங்குனி

## உள்ளுறை

பக்கம்

1. மகாத்மா காந்தி —ஹோமர் ஏ. ஜாக் 1
2. கீதையின் போதனை —ராஜாஜி 6
3. கடல் கிழவர் 10
4. புதுமை காணும் ஆவா —லியோனார்டு ரூல் 14
5. கொய்த மலர்கள் 18
6. நியாஸாலாந்து 30
7. கவி ரவிந்திரநாத் தாகுர் 43
8. சதுரங்கம் 39
9. தேசீய ஒழுங்குக் கட்டுப்பாடு 34
10. உலக பாங்கி-செலாவணி நிதி 48
11. உருக்கு உற்பத்தி 51
12. நாட்டு வைத்திய முறை 57
13. போலீஸ் கல்லூரி 63
14. உவமை 67

# மகாத்மா காந்தி

**ஹோமர் ஏ. ஜாக்**

*(அண்ணாவின் கட்டுரைகள், சொற்பொழிவுகள் அடங்கிய நூல் ஒன்றை ஹோமர் ஏ. ஜாக் என்ற அமெரிக்க அறிஞர் வெளியிட்டுள்ளார். மகாதேவ் தேசாய், பியாரேலால், நேருஜி, ராஜன்பாபு ஆகியோர் மகாத்மாவைப் பற்றி எழுதிய கட்டுரைகளுடன், லூயிபிஷர், வின்செனட் ஷீன் போன்ற அமெரிக்க அறிஞர்களின் கட்டுரைகளும் தொகுப்பில் இடம் பெற்றிருக்கின்றன. தொகுப்பாசிரியர் ஜாக் இந் நூலுக்கு வரைந்துள்ள முகவுரையே அண்ணலுக்கு அஞ்சலி செய்யும் கட்டுரையாக அமைந்திருக்கிறது. அதன் சுருக்கமே இக் கட்டுரை)*

நம் காலத்தில் மட்டுமின்றி உலக வரலாற்றிலேயே தோன்றிய மகான்களில் ஒருவர் மகாத்மா காந்தி.

மகிமை என்பது ஏமாற்றிவிடக்கூடிய தன்மையையுடைத்ததாக இருக்கிறது. ஏனெனில் பல போர்களில் பிரமாத வெற்றிகளை யடைந்த ஒரு யுத்த வீரனை அடுத்த நூற்றுண்டில் அடியோடு மறந்துவிடக் கூடும். ஒரு முனிவர் அல்லது துறவி தமது ஜீவிய காலத்தில் யாருக்கும் தெரியாதவராக இருந்து விடுவதும் பிற்காலத்தில் தலைமுறையினர் அவரைப் போற்றி வழிபடுவதும் கண்கூடு. ஆனால் காந்திஜியின் மகிமை அவருடைய வாழ்நாளிலேயே மிகப் பரவலாக உணரப்பட்டதுடன் குன்றுமலும் இருக்கிறது. உண்மையில் அது வளரக்கூடியதாகவும் இருக்கிறது.

இருபதாவது நூற்றுண்டின் முற் பகுதியில் அவர் வாழ்ந்தார். இக் காலத்தில்தான், எடிஸன், போர்ட், மார்க்கோனி போன்ற விஞ்ஞான மேதைகளும், புதுமைகளைக் கண்டு பிடித்தவர்களும், லெனின், ஹிட்லர், ஸ்டாலின் போன்ற ஆட்சியாளர்களும் வாழ்ந்தனர். சர்ச்சில், ரூஸ்வெல்ட் போன்ற ராஜதந்திரிகளுக்கும் ஐன்ஸ்டின், ஸ்க்வீட்ஸர் போன்ற சிந்தனையாளர்களுக்கும் இருந்த கௌரவமும் மதிப்பும் காந்திஜிக்கு இருந்தன. ஆயினும் இந்த சகாப்தத்தின் வரலாறு எழுதப் படுகையில், காந்திஜி நமது தலைமுறையின் மாபெரும் மேதாவிகளில் ஒருவராக கருதப்படுவார்.

பல நூற்றுண்டுகளுக்கு ஒரு முறை தோன்றும் மகாஞகத் திகழ்கிறுர் காந்திஜி. கீழ்த்திசை பண்பாட்டின் ஜோதி அவர்.

கீழ்த்திசை நாடுகளில் கோடிக் கணக்கான மக்கள் காந்திஜியை வணங்கினர். மேற்கு நாடுகளில் அவர் கீர்த்தி பிரசித்தமாக இருந்தது. அவர் மிகவும் போற்றப் பட்டார். பிரிட்டிஷ் சிங்கத்தின் வாலை முறுக்குவதில் வெற்றி கண்டவர்; நாலு முழத் துணி யணிந்த, பொன் நிற மேனியுடைய மெலிந்த மனிதர் என்று பொதுவாக அவர் கருதப்பட்டிருக்கலாம்.

காந்திஜி பிற்கால சந்ததியினருக்கு விட்டுச் சென்றுள்ளவை அனந்தம். அவர் விட்டுச் சென்றது சொத்துக்கள் அல்ல; ஓர் அசாதாரண வாழ்க்கை முறையும் ஊடுருவிப் பார்க்கும் தார்மிக நுண்ணறிவுமாகும். பல உலகத் தலைவர்களின் வாழ்க்கை முறை வேறு,போதித்து வந்த தத்துவங்கள் வேறு என்ற நிலையில் வைத்து இதைப் பார்க்கையில் இது ஒரு தர்ம சங்கடமான மாறுபாடு என்றே கூறலாம்.

மகாத்மாவைப் பொறுத்த மட்டில் அவருடைய வாழ்க்கையும் போதனைகளும் ஒன்றே. அவருடைய செய்திக்குச் சிறந்த விளக்கமாக இருப்பது அவருடைய சுய சரிதையாகும்.

"ராஜத்துரோகப் பக்கிரி" என்று காந்திஜியை ஒரு சமயத்தில் வின்ஸ்டன் சர்ச்சில் இகழ்ச்சியாகக் கூறினார். இப்பொழுது இக் கூற்றை யாரும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். அது மட்டுமல்ல; மகாத்மா முக்கியமாக ஒரு முனிவரா அல்லது அரசியல்வாதியா என்பதிலும் பலரிடையே கருத்து வேற்றுமைகள் உண்டு. "அரசியல் வாதியாக இருக்க முயற்சிக்கும் ஒரு முனிவர் என்று என்னை மக்கள் வருணிக்கின்றனர், ஆனால் உண்மை இதற்கு நேர் மாறாகும்" என்று காந்தியே கூறியிருக்கிறார். அவர் பயிற்சி பெற்றது சட்டக் கல்வியில்; மதத்திலோ அல்லது வேதாந்தத்திலோ அல்ல. ஆயினும் அவருக்கு மதத்திலிருந்த பற்றுதல் அபாரம். உண்மையான சமய வாழ்க்கையையே அவர் நடத்தி வந்தார். அவர் இதில் வெற்றி கண்டார். ஒரு சிலருக்குத்தான் இத்தகைய வெற்றி கிட்டியுள்ளது. அது மட்டுமல்ல; தீமையை எதிர்க்கும் பிரச்னைக்குச் சமயப்பூர்வமான ஒரு புதிய முறையையும் வகுத்தவர் மகாத்மாதான். எனினும் அவர் ஓர் அரசியல் வாதியுமாவார். அவர் அனுஷ்டித்த மதம் யாவரும் எளிதில் பின்பற்றக் கூடியது. தென் ஆப்பிரிக்காவிலும் சரி, இந்தியாவிலும் சரி—அவருடைய முயற்சிகள் முழுக்கஅரசியல் சம்பந்தமானவையே; இதில் ஐயமில்லை. ஹொரஸ் அலெக்ஸாண்டர் சாதுர்யமாகக் கூறியபடி, காந்திஜியின் வாழ்க்கை முழுவதும் தமது மக்களைச் சுதந்திரத்திற்காகத் தயார் செய்வதற்கும்,பிறகு சுதந்திரம் பெற உதவி செய்வதற்குமே அர்ப்பணம் செய்யப்பட்டிருந்தது.

சுதந்திரத்திற்கு இந்திய மக்களைத் தயார் செய்ய காந்திஜியின் பொறுமை மிக்க முயற்சிகள், "நிர்மாணத் திட்டம்" என்று அழைக்கப்பட்டு வந்துள்ளன. உள் நாட்டில் பலவித சீர்திருத்தங்களைப் பற்றியது இது. அவருடைய நிர்மாணத் திட்டத்தின் வேறு சில அம்சங்கள் உலக முக்கியத்துவம் கொண்டவையாக இருந்தன.

ஹிந்து, கிறிஸ்துவ சமய நூல்களின் உதவியுடனும் ஹென்ரி டி. தோரோ, லியோ டால்ஸ்டாய் போன்ற பேரறிஞர்களின் வழியைப் பின்பற்றியும் மகாத்மா ஒரு புதிய போராட்ட முறையை வகுத்தார். இனவெறி, போர், போன்ற தீமைகளின் மிகக் கொடிய விளைவுகளையும் எதிர்க்க இந்த முறையை ஒரு சிறிய கோஷ்டியோ அல்லது ஒரு பெரிய கோஷ்டியோ அல்லது ஒரு தேசம் பூராவுமோ கையாளக் கூடியதாக இருந்தது. 'சத்யாக்கிரஹம்'என்ற வார்த்தையைச் சிருஷ்டித்தவர் காந்திஜியே. இச்சொல் "சாத்வீக எதிர்ப்பு, சட்ட மறுப்பு" என்ற பதங்களைவிடத் திருப்திகரமாக இருந்தது அவருக்கு. சத்யாக்கிரஹ முறையை வகுத்தவரும் அவரே. முதலில் தென் ஆப்பிரிக்காவிலும் பிறகு இந்தியாவிலும் நீண்டகால அனுபவத்தின் பேரில் வகுக்கப்பட்டமுறை இது.

உண்மையில் இது சரித்திர பிரசித்தி பெற்ற சமுதாயச் சீர்த்திருத்த புதுமையாகும். சத்தியாக்கிரஹம் என்பது முனிவர்களுக்கு மட்டுமன்று: பாமர மக்களுக்கும் தான் என்று காந்திஜியே கூறினர். இது பலாத்காரமில்லாத போராட்டம். துவேஷமல்லாத, அன்பையே அடிப்படையாகக் கொண்டது. அதுதான் எதிரிகளை நேசிப்பதும்,அவர்களது மனத்தை மாற்றுவதற்கும் தான் கஷ்டங்கள் அனுபவிப்பதுமாகும். பாபத்திற்கும் பாபிக்குமுள்ள வித்தியாசத்தைக் காட்டுகிறது. தீமைக்கும் தீமை

புரிவோருக்கும் உள்ள வேற்றுமையைச் சுட்டுகிறது. இது வீரரின் ஆயுதம்; கோழையின் ஆயுதமன்று. ஒழுக்கக் கட்டுப்பாடு, சுயநலத் தியாகம், கஷ்டம் அனுபவிக்கும் பண்பு, பட்டினி, சிறைவாசம், மரணம் ஆகியவை இதற்குத் தேவை.

ஆயினும் உன்னதமான லட்சியங்களுக்கு ஏற்ப அவற்றை அடையும் முறைகளும் அமையவல்ல சிறந்த பண்பு கொண்டது சத்யாக்ரஹ முறை.

காந்திஜி தமக்குக் கோயில்கட்டி வைப்பதை விரும்பவில்லை. அவரை கவுரவிக்க அவர் பெயரால் மதம் ஒன்றைந் தோற்றுவிக்கக் கூறவில்லை. அவர் வேண்டியதெல்லாம், "நமது சக்திகள் அனைத்தும் உள்நாட்டிலும், உலகிலும் அமைதியும் சமாதானமும் நிலவ-நியாயமான, அஹிம்சா முறைகளைக் கொண்ட சமாதானம் நிலவ, பயன்படுத்தப்பட வேண்டும்" என்பதே.

# கீதையின் போதனை

[டில்லி வர்த்தகக் கல்லூரி மாணவர் ஏற்பாடு செய்திருந்த கீதை ஆராய்ச்சிப்பிரிவில் ஹிந்து தர்ம லட்சியங்கள் என்ற விஷயம் பற்றி ராஜாஜி மூன்று பிரசங்கங்கள் நிகழ்த்தினர். அவற்றுள் முதற் பிர சங்கம் இது)

ஆண்டவனின் அருளைப் பெறுவதற்கான வழி சர்ச்சையோ, படிப்போ அல்லது புத்தியோ அன்று, பக்தி மூலம்தான். அதாவது பிரார்த்தனை மூலம் ஆண்டவ னிடமே முறையிட்டுக் கொள்வதுதான் அவர் அருளைப் பெறுவதற்கான மார்க்கம் என்று கதோபனிதஷத்தில் கூறப்பட்டிருக்கிறது.

கீதையையோ அல்லது மற்ற வேத நூல்களையோ படித்துப் புலமை பெற்று விட்டதை, பக்தி சிரத்தையு டனே அல்லது மதத்துடனே போட்டுக் குழப்பாதீர்கள். ஒருவர் பெரிய சமஸ்கிருத மேதாவியாக இருக்கக்கூடும். சங்கராச்சாரியாரின் நூல்களை யெல்லாம் கசடறக் கற்றவ ராக இருக்கக்கூடும். இருந்தாலும் மதத்திலிருந்தோ, அல்லது பக்தி சிரத்தை கொண்ட வாழ்க்கையிலிருந்தோ, அவர் தொலை தூரம் விலகி இருப்பார். குரங்குக்குப் பல வித்தைகளை அது மிகவும் சாமர்த்தியமாகவும் நன்றாகவும் காட்ட நாம் கற்றுக் கொடுக்கலாம். ஆனால் ஒரு கனவா னைப் போல உடைகளை அணிந்து கொண்டு கனவானைப் போல நடந்துகொண்டாலும்கூட, சில சமயங்களில்

கணவானைக் காட்டிலும் கொஞ்சம் நன்றாக நடந்து கொண்டாலும்கூட குரங்கு குரங்கு தான்.

வெளிப் புறமாகச் செய்யும் காரியத்திற்கும் இக் காரியத்தைச் செய்யத் தூண்டும் மனோ நிலைக்கும், உண்மையான, பரிபூரணமான இணைப்பு (இசைவு) இருப்பதில்லை இப்படி வித்தைகள் காட்டுவதால் நல்லது என்று நினைத்து குரங்கு இதெல்லாம் செய்வதில்லை. நிர்ப்பந்தத்தால் அது வித்தைகளைச் செய்து காட்டுகிறது. ஒருவனின் வெளிப்புறப் பொறுப்பும், படிப்பும், மதப் பற்றுள்ளவனுடையவை போல் தோற்ற மளிக்கலாம். ஆனால் படிப்பு ஒரு புறமிருக்க உன் மனது ஆண்டவனிடம் பற்றுக் கொண்டிருக்கிறதா என்பதுதான் பிரச்னை.

மனத்தில் பக்தி உணர்ச்சியும் கடவுள் அன்பும் இல்லாவிடில் எவ்வளவுதான் சமஸ்கிருதத்தில் பாண்டித்யம் பெற்றிருந்தாலும் அது ஒரு குரங்கின் சாமர்த்தியமான வித்தைகளைப் போன்றதே. அது உண்மையான மதமில்லை. நீங்கள் பக்தி சிரத்தையுள்ளவர்களாக இருக்க விரும்புகிறீர்களா அல்லது பண்டிதர்களாக மட்டும் இருக்க விரும்புகிறீர்களா? பக்தி சிரத்தையுடன் இருக்க விரும்புகிறவர்கள் கடவுளின் அருளுக்குப் பாத்திரமாகிறார்கள்; நல்லவர்களாகிறார்கள். பண்டிதர்களாக மட்டும் இருக்க விரும்பினால் அது பேராசையை ஊட்டி, வளர்த்துப் படாடோபப் படிப்புக்குத்தான் வழி செய்கிறது அல்லது வேறு சில நீசத்தனமான உணர்ச்சிகளைத் திருப்திப்படுத்துகிறது. அதனால்தான், "விவாதங்கள் மூலமோ, அல்லது புத்தி தீட்சண்யத்தின் மூலமோ, அல்லது அதிகப்படிப்பு மூலமோ, கடவுளை நீ காணமுடியாது. கடவுள் தரிசனத்திற்காக உன் மனம்

உண்மையிலேயே ஏங்கும்போதுதான் அவர் அருள் உனக்குக் கிடைக்கிறது." என்று பெரியோர் கூறி யுள்ளனர். நம் நாட்டில் பண்டிதர்களும் வேதாந்திகளும் நிறைய இருக்கிறார்கள். நாமெல்லோரும் நல்லவர்களா கவும் பக்தி சிரத்தை யுள்ளவர்களாகவும் இருக்கவேண்டு மென்பதுதான் நமது விருப்பம்.

நமது நாட்டின் புதிய வாழ்வில் பல பிரச்னைகள் நம்மை எதிர்நோக்கி இருக்கின்றன. தார்மிக தத்துவங் களுக்குப் புத்துயிரளிப்பது அத்யாவசியம். வெளிப்புறச் சட்ட திட்டங்கள் ஒருபுறமிருக்க நல்லொழுக்கத்திற்கான உட்புறக் கோட்பாடுகளைப் புதிதாக அபிவிருத்தி செய்ய வேண்டும்.

இன்று நம்மை வாட்டி வதைக்கும் பல பிரச்னைகளுக் குப் பரிகாரம் காணவேண்டுமானால் ஆத்மிக வாழ்வைப் புதுப்பித்துக் கொள்ள நாம் முயலவேண்டும் என்று முன்னால் அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் சமீபத்தில் செய்த பிரசங்கத்தில் குறிப்பிட்டார்.

மனித சரீரத்திலுள்ள ரத்தத்தின் சக்தியைப் பாருங் கள். சிசுக்களுக்குத் தீங்கு நேரிடாமல் ரக்ஷிக்கும் வேலை யும் எல்லாப் புண்களையும்,காயங்களையும் ஆற்றும் வேலை யும் செய்ய அது எப்பொழுதும் தயாராக இருக்கிறது. வெளிப் புறத்தில் தடவும் களிம்புடனும் மற்ற மருந்து களுடனும் ரத்தத்தை ஒப்பிட்டுப் பாருங்கள். சட்ட திட்டங்களையும் விதிகளையும் காட்டிலும் தார்மிக தத்துவங் களும், இந்தத் தத்துவங்களை நிலைநாட்டும் பண்பாடும் மதமும் எவ்வளவோ சிறந்தவை.

முக்கியமாகத் தொழில் துறையிலும் வர்த்தகத் துறையிலும் வாழ்க்கைத் துறையிலும் ஆயத்தம் செய்து கொண்டிருக்கும் மாணவர்கள் நீங்கள். இது போன்ற

பொதுஜன சேவைத் துறையில்தான் உண்மையான மதப் பற்றுள்ள ஆட்கள் நமக்கு வேண்டும். வெளிப் பகட்டிற்காக வேத புத்தகங்களைப் படிக்காதீர்கள். ஆண்டவன் பால் உங்கள் மனத்தைத் திருப்புங்கள். நீங்கள் எங்கிருந்தாலும் சரி என்ன செய்து கொண்டிருந்தாலும் சரி, ஆண்டவன் அருகே நாம் இருக்கிறோம் என்று ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். கடவுள்தான் நம்மெல்லோருக்கும் தாய் தந்தை. அந்த மகா சக்திக்கு உங்கள் அன்பைக் கொடுங்கள். நமது தாய் வருத்த மடையும் படியோ அல்லது வெட்க மடையும்படியோ எக் காரியத்தையும் செய்யாதீர்கள். நீங்கள் என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் கடவுளை எப்போதும் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். இதுதான் கீதை கற்பிக்கும் பாடம்.

# கடல் கிழவர்

"வளைகுடா நீரோட்டத்திலே, சின்னஞ் சிறு படகிலே, தன்னந் தனியே மீன் பிடிக்கச் சென்றார் ஒரு முதியவர்; எண்பத்து நான்கு நாட்கள் ஆயின; எனினும் மீன் ஒன்றேனும் பிடிபடவில்லை."

இவ்வாறு தொடங்குகிறது ஏர்னஸ்ட் ஹெமிங்வேயின் புலிட்ஸர் பரிசு பெற்ற நாவல் "கடல் கிழவர்" (Old Man and the sea) என்பது நாவலின் பெயர். திரைப்படமும் கதையைப் போலவே ஆரம்பிக்கிறது. சிறிது காலமாக வெளிவந்துள்ள ஹாலிவுட் படங்களில் மிகவும் வேற்றுமைக்குள்ளான படம் இது.

இந்த நாவலைத் திரைப்படம் ஆக்கியிருக்கவே கூடாது என்று கூறுவோர் உளர்; படமாக்கியது சரியே என்று கருதுபவர்க்குள்ளும் திரைப்படக் கதையை ஆக்கிய முறை பற்றிக் கருத்து வேற்றுமை உண்டு. படப் பிடிப்புத் துறையில் இது மிகவும் சிறந்தது என்று பலர் இதனைப் புகழ்கின்றனர். இந்தப் படம், நாவலின் சிறப்பைக்காட்ட பெரிதும் தவறிவிட்டது என்று கருதுவோரும் உளர்.

முற்றிலும் மாறுபட்ட இருதிறந்தார் சொல்வதற்கும் இடையில் உள்ளது இது பற்றிய உண்மை. இந்தக் கதையைப் படமாக்கியது மிகவும் முக்கியமானதே யன்றி, படத்தின் வெற்றியோ தோல்வியோ அவ்வளவு முக்கியமானதல்ல.

இது ஒரே ஆளைப் பற்றிய கதையே. இருந்தும் இதனைப் படமாக்கிய வார்னர் பிரதர்ஸ் உள்ளிட்ட ஹாலிவுட் ஸ்டூடியோ எதுவும் இதனைத் திரைப்படமாக்க நினைப்பதே வியப்புக்குரியது. அதுவுமல்லாமல், திரை ஓவியக் கலைஞர் பீட்டர் வீயர்ட்டல், உற்பத்தியாளர் லேலான்ட் ஹேவார்ட்,டைரக்டர் ஜான் ஸ்டர்ஜஸ் ஆகியோர் நாவலிலுள்ள சாதாரணக் கதையோடு நாடக நுட்பங்களையோ,காதலையோ,வழக்கமான இன்ப முடிவையோ சேர்க்கவில்லை. இதனை நாம் பாராட்ட வேண்டும். இந்தப் படம் நாவலில் கண்ட கதையை உள்ளவாறே காட்டுவதாக உள்ளது. நாவல்களைத் தழுவிய வேறு பல திரைப் படங்களுக்கும் இதற்கும் இது ஒரு வேறுபாடு.

திரைப்படத்தில் எளிதாகக் காட்டக்கூடிய கதை அல்ல இது. மூன்றில் இரண்டு பங்கு நிகழ்ச்சிகள் ஒரு சிறு படகில் நிகழ்கின்றன. அங்கு செயல் புரிபவர் முதுமையான ஒரு மீன்பிடிப்பவர். எண்பத்து நான்கு நாட்கள் அந்தக் கிழவர் ஒரு மீனும் பிடிக்கவில்லை. எண்பத்தைந்தாவது நாளில் ஏதோ ஒன்று தமது வலையை இழுப்பதாக அவர் உணர்கிறார். அது ஒரு பெரிய "மார்லின்" மீன். ராட்சஸ மீன் அகப்பட்டுக் கொண்டது. அவரது படகைவிட அது அதிக நீளமாக இருக்கிறது. அதை மிகவும் சிரமத்துடன் இழுத்துப் படகில் போட மூன்று நாட்களாக அதனோடு போராடுகிறார். கிழவர் மீனை இழுக்கிறார், மீன் படகை இழுக்கிறது. மீனோடும் கடலோடும் பஞ்ச பூதங்களோடும் தமது வலிமையை யெல்லாம் ஒருங்கு திரட்டி,திறமையாகப் போராடுகிறார் கிழவர்.

இறுதியில் அவர் வெற்றி பெறுகிறார். பாயைத் தமது ஊருக்கு நேரே திருப்பி அவர் புறப்படுகிறார். ஒரு மணி நேரத்துக்குப் பின் ஒரு சுறுமீன் வருகிறது. படகில்

கிடந்த செத்த மீனை அது அடித்துத் தின்கிறது. துடுப்பையும் கத்தியையும் கொண்டு கிழவர் சுருமீனைத் தாக்குகிறார். வேறொரு சுருமீன் வந்து படகில் கிடந்த மீனைத் தின்கிறது; அதையும் அவர் விரட்டுகிறார். இவ்வாறு தாம்பிடித்த மீனைத் தின்னும் சுருமீன்களை யெல்லாம் விரட்டிக் கொண்டே கரை வந்துசேர்கிறார். அவர் பிடித்த மீனின் முள்கூடுதான் மிச்சம்; வேறொன்றும் இல்லை.

இதுதான் கதை. தொடக்கத்திலும் முடிவிலும் சில காட்சிகள் சேர்க்கப்பட்டுள்ளன. கிழவரையும் ஒரு சிறு பையனையும் பற்றிய காட்சி ஒன்று உள்ளது. அவருக்கு ஒரே ஒரு நண்பன் அந்தச் சிறு பையன்தான். ஆப்பிரிக்காவின் கடற்கரையில் சிங்கக் குட்டிகள் விளையாடியது பற்றிய நினைவுகள், இளமையில் செய்த ஒரு மற்போர் ஆகியவை பற்றிய காட்சிகளும் உள்ளன.

இது, மனிதனையும் அவனது வாழ்க்கைப் போராட்டத்தையும் குறிக்கும் உவமானக் கதை. இந்தக் கதை சொல்பவர் ஓர் இடத்தில் முழங்குவதேபோல்,"மனிதனை அழித்து விடலாம்; ஆனால் அவனை வென்றுவிட முடியாது."

மனிதனின் வெல்லமுடியாத ஊக்கத்தை உரைக்கும் இந்தக் கதையில் புதிய முறை ஒன்று கையாளப் பெற்றுள்ளது. கதை சொல்பவர் இடைக்கிடையே பேசுகிறார். கிழவர் தனக்குத்தானே பேசிக் கொள்கிறார்: மீனோடும் பேசுகிறார். ஸ்பென்ஸர் டிரேஸி கதை சொல்பவராகவும் நடிகராகவும் வருகிறார். ஹெமிங்வே எழுதியுள்ள கதையை-எளிய ஆனால் வலிமை படைத்த வசனத்தை அவர் பேசுகிறார். விரைவாகவும் உணர்ச்சியாகவும் அவர் வசனம் பேசுகிறார். கிழவர் சொல்வதை முதியோர் பேசும் முறையில் நிறுத்தி நிறுத்திக் கூறுகிறார்.

டிரேஸி கிழவராக நடித்திருக்கிறார். அது மிகக் கடின மான வேலைதான். எனினும் அவர் அதைச் சிறப்புடன் செய்திருக்கிறார். வயதையும் பலவீனத்தையும் அவரால் சரியாகக் காட்ட முடியவில்லை. எனினும், கிழவரின் பண்பின் மாண்பையும் அயராத வீரத்தையும் அவர் நன்ருகச் சித்தரிக்கிறார்.

சில தொழில் நுட்பக் குறைபாடுகள் இந்தத் திரைப் படத்தில் உள்ளன. கடலில் எடுத்த காட்சிகளையும் ஸ்டூடியோக் குளத்தில் பிடித்த படங்களையும் இணைப்பதால் ஏற்பட்ட குறைபாடுகள் அவை. படப் பிடிப்பிலும் சில தவறுகள் காணலாம். இரண்டாண்டுக்குமேல் பன் முறை பிடிக்கப்பட்ட படங்களில் அவை நேர்ந்தால் இயல்பே.

ஆயினும், ஜேம்ஸ் வாங்ஹௌ என்பவரும் அவருடைய உதவியாட்களும் படம் பிடித்துள்ள சிறந்த காட்சிகள் சிலவற்றை மறக்கமுடியாது. கடலில் அலைகள் எழுந்து நுரை திரள்வதும், பறக்கும் மீன்களின் துடுப்புகள் மின்னுவதும், வெண் சிறகுகளை அடித்து எண்ணிறந்த பறவைகள் ஒளிவீசும் வானில் பறப்பதும் மறக்க முடியாத காட்சிகள். கிழவர் பாய்மரத்தைத் தம் தோளில் வைத்துக் கொண்டு, குன்றிலுள்ள தம் குடிசைக்குப் போகும் வழியில் இடறி விழுங்காட்சி, சிலுவை தாங்கி இயேசு பெருமான் கல்வாரிக்குச் சென்ற காட்சியைச் சிறிது நினைப்பூட்டும்.

குறைகள் உள்ளனவெனினும், இந்தத் திரைப்படம் தனிப் பெரும் சிறப்பு வாய்ந்ததாகும். இது கவிதையாகக் காட்சியளிக்கும் திரைப் படம்; ஒரு நற் கருத்தைக் காட்டும் சித்திரம். இத்தகைய படங்கள் அதிகமாக வெளிவருவதில்லை.

# புதுமை காணும் அவா

லியோனர்டு ரூல்

தேவை தூண்டினால் சிந்தனை வளரும் என்று கூறுவதுண்டு. சென்ற 300 ஆண்டுகளில், பிரிட்டன் கண்ட புதுமைகளை ஆராய்ந்தால், பிற காரணங்களாலும் சிந்தனையும் ஆய்வும் வளரும் என்பது தெரியும். ஆய்வுமனம் படைத்தோர் நிலை தனித் தன்மை வாய்ந்தது. ஒவ்வொன்றையும் துருவி ஆராயும்போது பல பல உண்மைகள் வெளிப்படுகின்றன, கண்டுபிடிப்புக்கள் தோன்றுகின்றன.

ஆய்வுமனம் பெற்ற ஜான் பெயர்டு, 1923 ஆம் ஆண்டில் ஒரு நாள் தான் கண்ட விந்தையைப் பிறருக்குக் கூறும் அவாவில், தெருவில் பாய்ந்தார். வழியோடு சென்ற ஒருவனை இழுத்து வந்து திரையில் அசையும் படத்தைக் காட்டி விளக்கத் தொடங்கினார். வந்தவன் என்ன கூறினானோ, நாம் அறியோம். ஆனால், முதல் முதலாக டெலிவிஷன் படத்தைப் பார்த்த பெருமை அவனைச் சேர்ந்தது என்று கூறமுடியும்.

ஜான் பெயர்டைப் போலவே ஜான் காக்ராப்டும், மனக் கிளர்ச்சியுடன் தெருவில் ஓடியதுண்டு. 1932 ஆம் ஆண்டில் ஒரு நாள், அவர் கேம்ப்ரிட்ஜிலுள்ள காவெண்டிஷ் சோதனைக் கூடத்திலிருந்து 'சாதித்து விட்டோம்' என்று கத்திக் கொண்டே தெருவில் சென்றார். தம் முடனுழைத்த வால்டனுக்கும் அந்த வெற்றியில்

பங்குண்டு என்பதற்காக 'சாதித்து விட்டோம்' என்று கூறினர் போலும்.

காக்ரா பிடும் தெருவில் சென்றவரிடம் தம்முடைய சாதனையை எடுத்துக் கூறினர். அவர் எப்படி விளக்கினரோ கேட்டவர் தெரிந்துகொண்டது என்னவோ, நாம் அறியோம். அவரும் வால்டனும் அணுவைப்பிளக்கும் முயற்சியிலீடுபட்டு வெற்றி பெற்றதே அந்த நிகழ்ச்சி அபரிமிதமான ஆற்றலைப் பெறவும் அணுகுண்டைத் தயாரிக்கவும், அந்த நிகழ்ச்சி, வழி வகுத்துவிட்டது என்பதை அன்று நாம் தெரிந்துகொள்ளவில்லை. இன்று அணு விஞ்ஞானம் தனிப் பிரிவாக வளர்ந்து விட்டது.

கனவு காட்டிய வழி

தொலைவிலுள்ளபொருளைத் திரையில்படம்பிடித்துக் காட்டும் 'ராடார்' சாதனம் கிடைத்ததே ஒரு சுவையான நிகழ்ச்சி. 1935 இல் ஸர் ராபர்ட் வாட்ஸனும் அவருடைய சகாக்களும், எதிரி விமானங்களின் வருகையையும் அவற்றின் நிலையையும் அறிந்து கூறும்சாதனம் ஒன்றை பிரிட்டிஷ் அரசாங்கத்திற்காக அமைக்கும் பணியிலீடுபட்டிருந்தார்கள். இரண்டாண்டுகள் உழைத்தும் முயற்சியில் வெற்றி பெறவில்லை. சில மாதங்களுக்கு முன் திரு. ராபர்டை பேட்டி காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தபோது, அவருடைய சாதனையைப் பற்றிக் கேட்டேன்.

அவர் சொன்னர்:-"ஒருநாள் நான் லிவர்பூல் ஸ்ட்ரீட் ஸ்டேஷனிலிருந்து சோதனைக் கூடமிருக்கும் ஆர் பெட்நெஸ-க்கு ரெயிலில் போய்க் கொண்டிருந்தேன். முயற்சி வெற்றி பெருது என்ற எண்ணம் உறுதி பெற்றதால், நான் சோர்ந்து போய்க் கிடந்தேன். அயர்வு மீதூற நான் உறங்கிவிட்டேன். இறங்குமிடத்தை நெருங்கிய

போதுதான் நான் விழித்துக்கொண்டேன். அப்போது எனக்கு மனத் தெளிவு ஏற்பட்டுவிட்டது--பிரச்னைக்கு விடையும் கிடைத்துவிட்டது. கனவு காட்டிய வழியில் ஆராய்ச்சியைத் தொடர்ந்தேன். 'ராடார்' சாதனத்தை அமைத்து வெற்றி பெற்றேன்."

தற்செயல் நிகழ்ச்சி

டாக்டர் பிளெமிங் (இப்போது ஸர் அலெக்ஸாண்டர் பிளெமிங்), 1929 இல், லண்டன் ஸெயின்ட் மேரீஸ் வைத்தியசாலையில் ஒரு வித நுண்கிருமிகளுடைய (பாக்டீரியா) இயல்பு அறிய ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார். சிறுசிறு கிண்ணங்களில் அந்தக் கிருமிகளை வளர்த்து வந்தார். ஒருநாள் ஒரு கிண்ணத்திலுள்ள சாறு திரிந்து பூஞ்சணம் படிந்திருந்தது. ஆராய்ச்சிக்கு பயனில்லை என்று அதை எறிந்துவிட முயன்றபோது, அவருடைய ஆய்வு மனம் விழித்துக்கொண்டது. பூஞ்சணத்தை உற்றுப்பார்த்தார். பூஞ்சணம் தோன்றிய இடத்தில் நுண் கிருமிகள் செத்துக் கிடப்பதைத் தெரிந்துகொண்டார். தொடர்ந்து ஆராய்ந்தபோது'பென்ஸ்லீயம் நொடேடம்' என்ற பூஞ்சணமே, நுண்கிருமிகளின் அழிவுக்குக் காரணம் என்று தெரிந்தது. இந்த பூஞ்சணத்திலிருந்து தான் இப்போது 'பெனிஸ்லின்' என்ற மருந்தைத் தயாரிக்கிறார்கள்.

விஞ்ஞானிகளுடைய உழைப்பால் மட்டுமே புதுமை நிகழுமென்பதில்லை. புதிய கருத்துக்களாலும், முன்னேற்றங்காண முடியும். அந்தக் காலத்தில் அஞ்சற் கடிதங்களுக்குத் தொலைவிலுள்ள ஊர்களுக்கு அதிகச் செலவிலும் அருகிலுள்ள ஊர்களுக்குக் குறைந்த செலவிலும், அஞ்சற் கடிதங்கள் அனுப்பநேர்ந்தது. தொலைவைக் கணக்கிடாமல், பிரிட்டனில் எந்தப் பகுதிக்கும் அனுப்பநேர்ந்தது.

தொலைவைக் கணக்கிடாமல், பிரிட்டனில் எந்தப் பகுதிக்கும் அனுப்ப, கடிதத்திற்கு ஒரு பென்னி வீதம் அஞ்சற் கட்டணம் வசூலித்தாலும் லாபமுண்டு என்ற யோசனையை ஸர் ரோலந்து ஹில் கூறினர். அவருடைய கருத்துக்கு, அதிவிரைவில், உலகெங்கும் ஆதரவு கிடைத்துவிட்டது.

சிறுவர்களுக்கு ஒழுக்கப் பயிற்சி யளித்து அவர்களுடைய ஆற்றலை நல்வழிப்படுத்திஞல் சமூகத்திற்குப் பயனுண்டு என்று எண்ணிஞர் பேடன் பவல். அதன் விளைவாகச் சாரணர் இயக்கம் தோன்றிற்று. தம்முடைய வாழ்நாளிலேயே, சாரணர் இயக்கம் உலகெங்கும் பரவியதைக் காணும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

சென்ற முந்நூறு ஆண்டுகளில், மனித குல முன்னேற்றத்திற்காக, பிரிட்டிஷ் விஞ்ஞானிகளும், அறிஞர்களும், பல புதுமைகளை வழங்கி,சிறப்பாகத் தொண்டாற்றியிருக்கிருர்கள். சைகிள், ரெயில் எஞ்சின், நீராவிக் கப்பல், இரும்புப் பாலம் எனப் பலவற்றை கண்டுபிடித்தவர்கள் ஆங்கிலேயர்களே. புகைப்பட நெகடிவ், கரிவாயு விளக்கு, கற்கரி, பிளாஸ்டிக், 'ஆடோமடிக்' கடியாரம், வெப்பம் காக்கும் குப்பி (வாகுவம் பிளாஸ்க்), துருவிலா எஃகு (ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்), தீயணைக்கும் எஞ்சின், கிருமி நாசினி, ரோடரி, அச்சு எந்திரம். காற்றடைத்த வண்டிச் சக்கரம் இவையெல்லாம் ஆங்கிலேயருடைய கண்டுபிடிப்புகளில் ஒரு சிலவாகும்.

புதுமைப் பொருள்களை பிறருக்குக் காட்ட, புது முயற்சி தோன்றியதும் பிரிட்டனில்தான். சர்வதேசப் பொருட்காட்சியை முதல்முதலாக நிறுவிய பெருமை ஆங்கிலேயரையே சேரும்.

# கொய்த மலர்கள்

பிரார்த்தனை

இதயம் உலர்ந்து நா வறண்டு ஏங்கும் வேளையில்
இரங்கி, வான மாரி யாக இன்பம் ஊட்ட வா
அருளின் ஒளியை யான் இழந்து அலையும் வேளையில்
அரிய கீத நாதம் எழுப்பி வண்மை புரிய வா
எட்டுத் திக்கும் ஆடி ஓடி இளைத்த வேளையில்
கிட்ட வந்து சாந்த மூர்த்தி அமைதி நல்க வா
துச்சனாக யான் ஒடுங்கிச் சோரும் வேளையில்
அச்சம் நீக்கும் மன்னனாக நெஞ்சத்து அமர வா
இச்சையால் யான் மாய வலையில் சிக்கும் வேளையில்
இடி இடித்து மின்னல் வீசி என்னைக் காக்க வா.

(கவியரசர் ரவீந்திரநாத் தாகுர் பாடலைத்
தழுவி அ. கு. ஆதித்தர் மொழிபெயர்த்தது)

ஆசை

காற்றிலே மேகங்கள் சின்ன, பின்னமாகும். அது போல பகவானுடைய நாமத்தை ஓதுவதினாலே உலக இன்பங்களில் உள்ள ஆசையும் சிதறிப்போம்.

—ஸ்ரீ சாரதாமணி தேவியார்

உண்மையும் அன்பும்

பிற மனிதர்களைப் போலவே நானும் தவறு இழைக்கும் தன்மை வாய்ந்த ஒரு எளியவன் என்று கருதுகிறேன். ஆனால் அதே சமயம் என் தவறுகளை ஒத்துக் கொள்ளவும், அப் பாதையிலிருந்து மீண்டு விடவும்

போதிய பணிவு என்னிடத்தில் உண்டு என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆண்டவனிடமும், அவனுடைய நல்ல தன்மையிலும் எனக்கு அசைக்கமுடியாத நம்பிக்கையும், உண்மையிலும் அன்பிலும் அழியாத மோகமும் உண்டு என்பதையும் ஒப்புக் கொள்கிறேன். ஆனல் இவை ஒவ்வொருவர் உள்ளத்திலும் பதுங்கிக் கிடப்பவையே அல்லவா?

—காந்தியடிகள்

என்னைப் பாருங்கள்

பொருள் ஒன்றுமே இல்லாதவனும், உடுப்பதற்கு ஆடையோ தங்குவதற்கு வீடோ இல்லாதவனும், ஓர் அடுப்புக்கூட இல்லாதவனும், அழுக்கடைந்தவனும், பரிசாரகனும், ஊரோ, நாடோ, இல்லாதவனுமான ஒருவனது வாழ்க்கையும் சுகமாகவே கழிகின்றது. இது எவ்வாறு சாத்தியம்? இது சாத்தியந்தான் என்று உங்களுக்குக் காட்டுவதற்காக கடவுள் ஒரு மனிதனை இதோ உங்கள்முன் அனுப்பி யிருக்கிருர். அவன் நான்தான்.

என்னைப் பாருங்கள்! எனக்கு ஒரு ஊர் இல்லை. ஒரு வீடு இல்லை; ஒரு பணியாளும் இல்லை. நான் நிலத்தின்மேலேயே படுத்து உறங்குகிறேன். எனக்கு மனைவியோ, மக்களோ, மாளிகையோ இல்லை. தரையும் வானமும் ஒரு கிழிந்த கந்தையுமே எனது ஆஸ்திகள்.

எனக்கு என்ன வேண்டும்? எனக்கு ஏதேனும் கஷ்டங்கள் உண்டா? ஒன்றுமே யில்லாதவனக இருப்பதை நீங்கள் காணவில்லையா?

நான் யாதாயினும் ஒரு பொருளை விரும்பி அதனை அடையாமல் இருந்ததையோ, அல்லது வேண்டாம் என்று விலக்கிய ஒரு காரியத்தில் இறங்கித் தவித்ததையோ நீங்கள் யாராயினும் எப்பொழுதாயினும் கண்டதுண்டா?

நான் தெய்வத்தின் மீதாயினும், ஒரு மனிதன் மீதாயினும், எப்பொழுதாயினும் குறை கூறியது உண்டா? எந்த மனிதன் மீதாயினும் நான் பொல்லாங்கு சொல்லியது உண்டா?

நான் துக்கத்தினுல் முகம் வாடியிருந்ததை, நீங்கள் யாராயினும் எப்பொழுதாயினும் கண்டதுண்டா?

நீங்கள் பயந்து நடுங்கி வியந்து கொண்டாடும் மக்களை நான் எவ்வாறு மதிக்கிறேன். அடிமைகளைப் போல் நடத்த வில்லையா?

ஒரு மனிதனுக்கு இத்தகைய விஷயங்களைச் சிந்திக்கவும், சூரிய-சந்திர–நட்சத்திரங்களைக் காணவும், நிலத்தையும் நீர் நிறைந்த கடலையும் கண்டு களிக்கவும், வசதிகள் இருக்கையில் அவனை ஓர் ஒண்டி யென்ருே, நொண்டியென்ருே சொல்லுவது தகுமா? தகாது.

—கிரேக்க ஞானி எபிக்டிடஸ்

தன்னம்பிக்கை

நம்மை நாமே வெறுக்காமல் இருப்பது நமது முதற் கடமையாகும். முன்னேற்ற மடைவதற்கு முதலில் தன்னம்பிக்கைவேண்டும். தன்னம்பிக்கை இல்லாதவன் கடவுள் மேல் நம்பிக்கை வைக்க மாட்டான்.

—சுவாமி விவேகாநந்தர்

சுயநலமிகள்

சுயநலத்திலேயே குறியுள்ளவர்கள் அன்னியரைக் கொள்ளையடித்து முடித்தபிறகு, தம்மைச் சேர்ந்தவர்களைக் கொள்ளையடிக்கச் சுளுவாகத் தயாராகி விடுகிருர்கள்.

—காந்தியடிகள்

துன்பம்

துன்பப்படுவது மனிதஇனத்துக்கு இயற்கையானது. தாய் துன்பப்படுகிருள்; ஆகவேதான் அவள் குழந்தை

வாழ முடிகிறது. வாழ்வு சாவிலிருந்து உண்டாகிறது. கோதுமைத் தானியம் வளரவேண்டுமானால், அதற்காக அதன் விதை அழிந்தேயாகவேண்டும். துன்பப்படாமல் எந்த தேசமும் புனித மடைந்து விழித்து எழுந்ததில்லை முன்னேற்றம் துன்பம் அடைவதன் அளவைப் பொறுத் ததே யாகும். அதிகத் துன்பமே மிகுந்த புனிதம் ஏற் படுத்தக் கூடியது; மிகவும் முன்னேற்றம் அடையச் செய்யக்கூடியது.

—காந்தியடிகள்

ஒரே காரணம்

மனித ஜாதி ஏன் அடிக்கடி சர்வ நாச யுத்தங்களுக் கும், துன்பங்களுக்கும் இலக்காகிறது? ஏன் எதிர்பாராத ஆபத்துக்களில் சிக்கி விடுகிறது? இவற்றுக் கெல்லாம் ஒரே காரணம்தான். அதாவது, ஒவ்வொருவருக்கும் மனத்திலே சமாதான உணர்ச்சியும் தன்னடக்கமும் இல்லாமைதான்.

—பாஸ்கல்

அதற்கு அடுத்தது

ஒருவர் சுயமான சிந்தனையாளராக ஆகாதபோதிலும் அதற்கு அடுத்தபடியாக அவர் செய்யக் கூடியது பிறரு டைய உயர்ந்த கருத்துக்களை உணர்ந்து போற்றுதல். சுயமான சிந்தனைப் பெருமை இல்லையே என்று வெட்கப் படலாகாது.

—ஆசார்ய கிருபளானி

சீர்திருத்தக்காரன்

பிறரைச் சீர்திருத்த விரும்புவன் முதலில் தன்னைச் சீர்திருத்திக் கொள்ள முயலவேண்டும். அம் முயற்சியில் வெற்றி கிட்டினால்;விருப்பம் நிறைவேறவும் வழி கிட்டும். ஒளி நிறைந்துள்ள இடம்தான் எவரையும் வசீகரிக்கும். அவ்வொளியை நோக்கித் தாமாகவே வருவார்கள்,

இருளில் இருந்து கொண்டு எவரையும் அழைக்கவும் முடியாது; வழிகாட்டவும் முடியாது.

—ஷேக்ஸ்பியர்

தர்மகர்த்தர்

தர்மகர்த்தர் கோயில் பணத்தையும் அதிகாரத்தையும் தன்னுடையது என்று நினைப்பது பாவம்; சட்டத்துக்கும் விரோதம்; கடவுள் தண்டனையும் கிடைக்கும். அதேபோல அரசாங்கத்தின் பணத்தையும் அதிகாரத்தையும் நிர்வகிக்கும் மக்களுடைய பிரதிநிதிகள், அவற்றைத் தங்களுக்குச் சொந்தமென்று நினைப்பது மகா பாவம்; மக்களின் தண்டனை பொல்லாதது.

—ராஜாஜி

நாடுவது உண்மையையே

நான் எண்ணுகிற எண்ணமாவது, செய்யும் காரியமாவது குற்றமுள்ளது என்று ஒருவன் அறிவுறுத்துவானாகில் உடனே மாற்றிக் கொள்வேனாக. குற்றத்தை எடுத்துக் காட்டியவனுக்கு நன்றியும் செலுத்துவேனாக. நான் நாடுவது உண்மையைத்தான். உண்மையினால் எக்காலத்திலும் ஒருவன் துன்பமடைந்தது கிடையாது. உண்மையைப் புறக்கணித்து அஞ்ஞானத்திலிருந்து கொண்டு தன்னைத்தான் மோசம் செய்து கொள்பவனே கெடுறுவான்.

—மார்க்கஸ் அரேலியர்

காப்பது சினம்

சினத்தை அடக்கவேண்டிய அந்த ஒரு சீரிய பாடத்தை வேதனை அனுபவத்தின் மூலம் நான் கற்றுள்ளேன். கட்டுப்படுத்தப்பட்ட வெப்பம் சக்தியாக மாற்றப்படுவது போல அடைக்கப்பட்ட கோபத்தையும் உலகத்தை அசைக்கும் ஒரு சக்தியாக மாற்ற முடியும்.

—காந்தியடிகள்

துன்பம்

இறைவன் தந்த துன்பத்தைப் பொறுமையுடன் சகித்துக் கொள்ளாதவன் உண்மைப் பக்தன் அல்லன்.

—ஹலன்

அன்பு

நாம் அன்பைப் பெறுவோமாக, பெருக்குவோமாக. எல்லா எதிர்ப்பையும் இளக்கும் அன்பு; எல்லாப் பகைவரையும் வெல்லும் அன்பு எல்லா இடையூறுகளையும் அடித்துக் கொண்டு போகும் அன்பு, ஈதல், பெருந்தன்மை, சகிப்பு, நன்முயற்சி இவற்றை ஏராளமாகத் தரும் அன்பு; எல்லாத் தடைகளையும் வெல்லும் அன்பு; எல்லையற்ற, எதிர்ப்பற்ற, எதனையும் தன்னுள் மூழ்கச் செய்யும் அன்பு...ஒவ்வொருவரும் அன்புக் கடலாகவும், அன்பு நட்சத்திரமாகவும், அன்புத் துறைமுகமாகவும், அன்பு முத்தாகவும், அன்பு அரண்மனையாகவும், அன்பு மலையாகவும், அன்பு உலகமாகவும் இருக்கவேண்டும். உன்னிடம் அன்பு உள்ளதா? அப்போது உன் வலிமையை எவரும் எதிர்க்க வொண்ணாது. உன்னிடம் அனுதாபம் உள்ளதா? அப்போது உன் புகழை நட்சத்திரங்கள் யாவும் பாடும்.

—அப்துல் பாஹா

வாழ்க்கையின் நோக்கம்

வாழ்க்கையின் முக்கிய நோக்கம் என்ன? நேர்மையாக வாழ்வதும், நேர்மையாகச் செயல் புரிவதுமே. உடலுக்காக நம் எண்ணத்தை யெல்லாம் செலவிட்டோமாஞல் நம் ஆத்மாவின் வலிமை குன்றி விடும்.

—காந்தியடிகள்

தீரமும் பொறுமையும்

வாழ்க்கையில் பெருந்துயரங்கள் வரும்போது தீரம் வேண்டும். அற்பத் துயரங்கள் உண்டாகும் போது

பொறுமை வேண்டும். இவை உண்டாயின், உனது அன்றாடத் தொழிலை முடித்ததும் சாந்தியோடு உறங்கச் செல்க—அப்போது பகவான் விழித்திருக்கிறார்.

—விக்டர் ஹியூகோ

அமைதியும் தியானமும்

தியானம் இன்றி மனம் அமைதியை அடைய ஒண்ணாது; அமைதியின்றி ஞானம் அடைதல் முடியாது. "மனம் அமைதியடைந்த பின் நான் தியானிப்பேன்" என்பது நடக்கமுடியாத காரியம். அமைதியும் தியானமும் ஒருங்கே நிகழவேண்டும்.

—சுவாமி பரமாநந்தர்

ஒரு நிலைப் படுத்தல்

ஓர் ஊசியின் காது வழியாக ஒருநூலைச் செலுத்தும் பொழுது நூலை முறுக்கி, அதனைக் கூரியதாகவும் உள்ளே செல்லும்படிக்கும் ஆக்கல் வேண்டும். அது போல மனத்தின் நுனியைக் கூரியதாக்குதலுக்குப் பெயர் ஒரு நிலைப்படுத்தல் (ஏகாக்ரம்) என்பது.

ஒரு நூலில் உள்ள சிறிய இழைகள் நாலா பக்கங்களிலும் நீட்டிக் கொண்டிருக்கும்பொழுது, ஊசியின் காது வழியாக அதனைச் செலுத்தமுடியாது. அது போல ஒரு சிறிது சலிப்பு இருக்கமாயினும், தியானம் முதலியன கைகூட முடியாதனவாம், மனத்தை அசைவற்றிருக்கச் செய்தலே ஏகாக்கர நிலை—ஒரு முனைப்பட்ட நிலையாகும்.

—சுவாமி துரியாநந்தர்

ஜனநாயகம்

ஜனநாயகம் என்றால் 'நான் உனக்குச் சமம்' என்று அர்த்த மன்று; 'நீ எனக்குச் சமம்' பொருள்.

—ஜேம்ஸ் ரஸ்ஸல்

பிறவித் துன்பம்

இந்த வாழ்க்கையை உண்டாக்கியவன் யார் என்பதைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக, ஜீவிய சமுத்திரத்திலே பலமுறை பிறந்து தேடிப் பார்த்தேன். ஒரு பலனும் இல்லை. அவனைக் கண்டு பிடிக்கும் வழி தெரியவில்லை. பிறக்கப் பிறக்கத் துன்பமே உண்டாகிறது.

—தம்ம பதம்

துன்பமே தர்மம்

துன்பம் அனுபவிப்பதே மனித குலத்தின் லட்சணம். அது ஓர் அநாதி தர்மமாகும். குழந்தை பிறப்பதற்காக, தாய் துன்பம் அனுபவிக்கிருள். சாவிலிருந்தே வாழ்வு பிறக்கிறது

—காந்தியடிகள்

நிரந்தர பிரச்னைகள்

கல்யாணம், ஜலதோஷம்-இவை இரண்டும் மனித குலத்தின் நிரந்தர பிரச்னைகளாகும். இவற்றிற்கு இது வரை வழியேதும் கண்டுபிடிக்கப் பெறவில்லை.

—சிங்லேர் லூயி

உலகப் போக்கு

உலகம் திருடனையும் கொலைகாரனையும் மன்னித்து விடுகிறது. ஆனல் எதையும் எதிர்பாராது உதவுபனை அது வெறுக்கிறது.

—மைக்கேல் ஆர்லென்

கனவுகள்

நீ கண்ட கனவுகளை ஒருவருக்கும் உரைக்காதே. அவற்றைக் கூறுவதனல் உனக்குத் திருப்தியும் ஆனந்தமுமே உண்டாகலாம். எனினும் அவற்றைக் கேட்டு, ஒருவனுக்கும் அவற்றில் திருப்தியோ அக்கறையோ இல்லாமல் இருக்கலாம்.

—எபிக் டிடஸ்

ஆண்டவன் கிருபை

மழைத் தண்ணீர் மேட்டு நிலத்தில் தங்கி நிற்ப தில்லை. பள்ளமான இடத்துக்கு ஓடி வந்து விடுகிறது. அது போலவே ஆண்டவனின் கிருபை தற்பெருமையும் கர்வமுமுள்ளவர்களுடைய உள்ளத்தில் தங்கி நிற்ப தில்லை. பணிவுள்ளவர்கள் உள்ளத்தில்தான் தங்கி நிற்கும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

முதாதைகளும் பின் சந்ததியும்

சோனி என்ற ஞானி, ஒரு முறை சாலையிலே போய்க் கொண்டிருந்தார். வழியிலே ஒரு தோட்டத்தில் ஒரு பழ மரச் செடியை நட்டுக் கொண்டிருந்த ஒரு கிழவனைக் கண்டார்.

"இந்த மரம் பலனளிக்க இன்னும் எவ்வளவு வருஷங்களாகும்?" என்று கிழவனை ஞானி கேட்டார்.

"எழுபது வருஷம் ஆகும்" என்றான் கிழவன்.

"நீ இன்னும் அவ்வளவு காலம் இருக்கமுடியும் என்று நம்புகிறாயா?" என்று ஞானி வினவினார்.

கிழவன் மண்வெட்டியைக் கீழே போட்டுவிட்டு நிமிர்ந்தான்.

"நான் இந்த உலகத்தில் வந்து பிறக்கும்போது இது வறைந்தரமாயில்லை. என் முன்னோர்கள் எத்தனையோ மரங்களை நட்டுப் பயிர் செய்திருந்தார்கள். அவற்றின் பலன்களை நான் அனுபவிக்கிறேன். அதே போல என்னுடைய பின் சந்ததிகளுக்காக நானும் சில மரங்களை நடுகிறேன்" என்று கிழவன் கம்பீரமாகப் பதிலளித்தான்.

—'சக்தி'

முயற்சி

மனிதர் தம் சொந்த முயற்சியினலேயே தாம் விரும்பும் பொருள்களைப் பெறுகிருர்கள். முயற்சி செய்யாதவரே விதியைப் பற்றிப் பேசுவர். சோம்பேறிகளும் விதியையே முழுவதும் நம்பி யிருப்பவர்களும் ஒரு நாளும் தமது லட்சியத்தை அடையார். ஆதலால் ஒவ்வொருவனும் எல்லாப் படியாலும் சுய முயற்சியை உறுதியாகப் பற்றி நிற்கவேண்டும்.

—மதஸ்ய புராணம்

உண்மையும் போலியும்

உலகிலே ஓர் எறும்பைப் போன்று வாழ்க;பொய்யும் மெய்யும் கலந்த கலப்பே, சர்க்கரையும் மணலும் கலந்த கலப்பே, இவ்வுலகம். எறும்பாயிரு, சர்க்கரையை எடுத்துக் கொள்.

பாலும் நீரும் கலந்த கலப்பே இவ்வுலகம். ஆண்டவனது தரிசனத்தால் வரும் பேரின்பமும் இந்திரிய போகத்தால் வரும் பேரின்பமும் கலந்தது இவ் வுலகம். அன்னமாயிருந்து, நீரை விட்டுப் பாலைக் குடி.

நீர்க் கோழியைப் போல உலகத்தில் வாழ்க; நீர் பறவையின்மீது ஒட்டிக் கொள்கிறது. ஆனால் பறவை அதை உதறித் தள்ளுகிறது.

மண்ணுக்குள் வாழும் ஒருவகை மீனைப் போல வாழ்க; அம் மீன் மண்ணுக்குள் வாழ்கிறது; ஆனல் அதன் தோல எப்பொழுதும் பிரகாசமாயும் பளபளப்பாயும் உள்ளது.

உண்மையும் போலியும் கலந்ததே இவ்வுலகம். போலியைத் தள்ளிவிட்டு உண்மையை எடுத்துக் கொள்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

தூய ஆனந்தம்

தூய ஆனந்தம் நெஞ்சில் விளிம்பு வரை நிறையப் பெறவேண்டுமாயின், அந்நெஞ்சு அமைதியாய் இருந்தல் வேண்டும்.

—ஒரு பெரியார்

மெய்ச்சமயம்

நம்மை அறநெறியில் நிற்கக் கற்பிப்பதே, சகல சமயங்களிலும் மெய்ச் சமயமாகும்.

—ஸவான ரோலா

தெய்வ வழிபாடு

தர்ம காரியங்கள் செய்யும்பொழுதுதான் ஒருவன் தெய்வ வழிபாடு செய்வதாய்ச் சொல்லமுடியும்.

—ஸவான ரோலா

அறம்

இவ்வுலகில் இன்பமாவது அறம் ஒன்றே.

—போப்

அடியார்

எவரைக் காணும்தோறும் இறைவன் ஞாபகம் வருகின்றதோ, அவரே ஆண்டவன் அடியார்களில் சிறந்தவர்

—முகமது நபி

கற்றவர்

கற்றவர் என்பவர் யார்? கற்றபடி நிற்பவரே.

—முகமது நபி

1. பதினாயிரம் ஆண்டுகள் உயிரோடு இருக்கப் போவதாக எண்ணி நடவாதே. மரணம் உனக்காக எப்பொழுதும் காத்துக் கொண்டிருக்கிறது. உடலில் உயிருள்ள போதே நல்வினை செய். உயிர் போயின் பிறகு உனக்கு ஏதும் செய்யச் சக்தி இராது.

2. பிறர் நினைப்பதையும், சொல்லுவதையும் செய்வதையும் கருதாமல், தான் செய்வது நீதியும் சுத்தமும்

பொருந்தியதா என்று மட்டும் கருதுபவனை விட்டகலும் துன்பங்கள் பல! பிறருடைய துர்மார்க்கத்தை லட்சியம் செய்யாதே. நீ மாத்திரம் நெறியினின்று ஒரு மயிரிழை யேனும் பிறழாதே.

—மார்க்கஸ் அரேலியர்

சீனமகான் கொன்புக்ஸன் அறிவுரை

1. உனக்குத் தெரிந்ததைத் தெரியும் என்று ஒப்புக் கொண்டு, தெரியாத்தைத் தெரியாது என்று உரைத்தல் அறிவு.

2. நியாயம் இன்னதென்று அறிந்து அதைச் செய் யாதிருப்பது கோழைத் தனம்.

3. நீ கும்பிடும் தேவதைக்கு முன் நிற்பதுபோல எண்ணித் தொழு.

4. மனிதருக்கு உன்னைத் தெரியவில்லை என்று வருந் தாதே. உனக்கு மனிதர்களைத் தெரியவில்லை யென்றும் வருந்தாதே.

5. சிறிது நற்குணமுள்ள விடத்தும் வணக்கமும் இன்சொல்லும் இருக்கும்.

6. பிறர் உனக்கு எதைச் செய்ய விரும்புவாயோ, அதையே பிறருக்கும் நீ செய்வாயாக.

7. உலகை விடுவதினால் மட்டும் சாந்தம் ஏற்படாது. தன்னைச் சுற்றி யிருப்போரிடம் அன்புடன் பழகுவதினா லும்,உலகத்தோடுஒத்துவாழ்வதினாலுமே நலம்ஏற்படும்.

8. மனிதனிடத்தில் இருக்கும் உயர்ந்த சக்தியைக் கண்டுபிடித்து அதை வளர்ப்பதே கல்வியின் நோக்கம்.

9. நேரான மனத்தோடும், சாந்தமாய், நுட்பமான பகுத்தறிவுடன்,நல்லதை யறிந்து நடப்பவனே கற்றோன் எனப்படுவன்.

# நியாஸாலாந்து

நியாஸாலாந்து மத்திய ஆப்பிரிக்காவிலுள்ள ரொடீஷியா-நியாஸாலாந்து சமஷ்டி அரசைச் சேர்ந்த நாடு. பொருளாதாரத் துறையில் பின்தங்கிய இந்த நாட்டை சமஷ்டி அரசில் இணைத்தால்தான், மக்களுடைய வாழ்க்கை நிலை உயரும் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவு செய்தது. மத்திய ஆப்பிரிக்காவிலுள்ள நாடுகளை இணைத்து சமஷ்டி அரசு காணுவது அவசியம் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் 4.3. 1952 முதல் கருதி வருகிறது. வடக்கு ரொடீஷியா, தெற்கு ரொடீஷியா, நியாஸாலாந்து ஆகிய மூன்று மாகாணங்களும் வாணிப பொருளாதாரத் துறைகளில் ஒன்றையொன்று சார்ந்து நிற்கின்றன. ரொடீஷியா மாகாணங்களில் வளம் காண, நியாஸாலாந்து மக்களுடைய உழைப்புத் தேவை. வட ரொடீஷியாவிலுள்ள தாமிரக் கனியை வெட்டி எடுக்க தென் ரொடீஷியாவில் வாங்கி என்னும் இடத்திலுள்ள நிலக்கரி தேவை. ஸாம்பஸி நதியில் அணைக்கட்டி நீர் மின் நிலையத்தை அமைப்பதாலும், சமஷ்டியில் சேரும் மூன்று நாடுகளுக்கும் பயனுண்டு என்பது அதன் கருத்து.

நாட்டு வரலாறு

டேவிட் லிவிங்ஸடன் 1859 இல் நியாஸா ஏரியைக் கண்டுபிடித்த பிறகு தான் நியாஸாலாந்தின் தற்கால வரலாறு தொடங்குகிறது. 1591 இல் நியாஸாலாந்தை, பாதுகாப்பு நாடாகப் பிரகடனம் செய்து, ஆட்சிப் பொறுப்பை பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்றுக் கொண்டாகள்.

ரொடீஷியா–நியாஸாலாந்து சமஷ்டியின் பரப்பு 487,640 சதுர மைல். நியாஸாலந்து மலையும் பள்ளத் தாக்கும் நிறைந்த நாடு. நாட்டின் பரப்பில் நான்கிலொரு பங்கு நீரில் மூழ்கிக் கிடைக்கிறது. வடபகுதியில் மாபெரும் நியாஸா ஏரி இருக்கிறது. தென் பகுதியில் மிளாஞ்சே மலைத் தொடர் ஓடுகிறது. ஷைர், ஸாங்வே என்பவை நாட்டிலுள்ள முக்கிய ஆறுகள். நியாஸா லாந்தின் பரப்பு 49,177 சதுர மைல்.

ரொடீஷியா-நியாஸாலாந்து சமஷ்டியின் மக்கள் தொகை 7,250,000. இவர்களில் சுமார் எழுபது லட்சம் பேர் ஆப்பிரிக்க மக்கள். பிறநாட்டார்களில் ஐரோப் பியர் எண்ணிக்கையே அதிகம்.

நியாஸாலாந்திலுள்ள மக்களில் ஆப்பிரிக்கர்கள் 2,630, 000; ஐரோப்பியர்கள் 7,500; பிறநாட்டினர் 10,400.

ஆப்பிரிக்கர்களுக்குப் பாதுகாப்பு

ஆப்பிரிக்க மக்களில் பெரும்பான்மையோர் விவசா யத்தையே நம்பி,கிராமங்களில் வசிக்கிறார்கள். சமூகநலப் பணிகளாலும் ஆப்பிரிக்கர்களுடைய வாழ்க்கை நிலை உயர்ந்து வருகிறது. நிர்வாகப் பொறுப்பேற்கக்கூடிய ஆப்பிரிக்கர்களுடைய எண்ணிக்கை மிகமிகக் குறைவு. தகுதியுள்ளவர்களுக்கு உரிய பதவிகளை அளிப்பதுடன், கல்வி விஸ்தரிப்பின் மூலம், பொறுப்பேற்கக் கூடியவர் களுடைய எண்ணிகையை அதிகரிக்க ஆவன செய்ய வேண்டும்.

அரசியல் திட்டம்

1953 ஆம் ஆண்டு அரசியல் திட்டத்தில் நியாஸா லாந்து-வட ரொடீஷியா ஆகியவற்றின் பாதுகாப்பு நாட்டு அந்தஸ்தை அங்கீகரித்திருக்கிறார்கள். அங்கு

வாழும் மக்கள் விரும்பும் வரையில், அந்த மாகாணங்களில் தனி அரசு முறை நீடிக்கும். அந்த மாகாண அரசுகள், பிரிட்டிஷ் அரசின்கீழ் மக்களுடைய அரசியல் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தும்.

மாகாண சர்க்கார்களும் சமஷ்டி அரசும் தம்தம் வரம்பிற்குட்பட்டு சட்டமியற்றும் உரிமையுள்ளவை. சில துறைகளில் மாகாண சமஷ்டி அரசுகள் சட்டமியற்றலாம். சட்டத்துறையில் சிக்கலேற்படும்போது, சமஷ்டி சட்டத்திற்கே மதிப்புத் தரப்படும்.

ஆப்பிரிக்க மக்களின் நல்வாழ்வுக்கு வகை செய்வது மாகாண அரசுகளுடைய பொறுப்பாகும். வெளி உறவு தற்காப்பு, குடியேற்றம், பிரஜா உரிமை, ரெயில்வே-கப்பல் விமானப் போக்குவரத்து, தந்தி-தபால், நீர்ப்பாசனம் ஆகிய துறைகளையும், மாகாணங்களின் பொதுப் பிரச்னைகளையும் சமஷ்டி அரசு கவனித்து வருகிறது.

அமலிலிருக்கும் அரசியல் திட்டம் 1957இல் திருத்தப்பட்டது. இதன்படி சமஷ்டி சட்ட சபையில் 59 அங்கத்தினர்கள் உண்டு. இவர்களில் 44 பேர் பொதுத் தேர்தல் மூலம் இடம் பெற்றவர்கள் (தெற்கு ரொடீஷியா 24, வடக்கு ரொடீஷியா 14, நியாஸாலாந்து 8). இவர்கள் எந்த இனத்தையும் சேர்ந்தவர்களாக இருக்கலாம். ஆப்பிரிக்கர்களுக்காக எட்டு ஸ்தானங்கள் உண்டு. (தெற்கு ரொடீஷியா 4, வடக்கு ரொடீஷியா 2, நியாஸாலாந்து 2). இவர்களும் தேர்தல் மூலம் சட்டசபைக்கு வருகிறார்கள். இவர்களைத் தவிர வடரொடீஷியாவிலிருந்து 2 ஆப்பிரிக்கர்களும், பிரத்யேகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆப்பிரிக்கர்களுடைய நலனைக் கவனிக்க, மூன்று ஐரோப்பிய அங்கத்தினர்களும் சட்டசபையில் இடம் பெறுகிறார்கள்.

நியாஸாலாந்தில், உள்நாட்டு நிர்வாகத்தைக் கவனிக்க, கவர்னர் தலைமையில் ஓர் நிர்வாக சபை பணியாற்றுகிறது. இதில் அதிகாரத்தால் உரிமை பெறும் 3 பேரும், 2 அதிகாரிகளும், 2 அதிகாரப் பற்றற்ற அங்கத்தினர்களும் உண்டு.

நியாஸாலாந்து சட்டசபையில் கவர்னர் உட்பட 23 அங்கத்தினர்கள் உண்டு. இவர்களில் அதிகார-உரிமை பெறுவோர் 4 அதிகாரிகள் 7 அதிகாரப் பற்றற்றவர்கள் 11. அதிகாரப் பற்றற்ற அங்கத்தினர்களில் 5 பேர் ஆப்பிரிக்கரல்லாதவர்கள். ஆப்பிரிக்க அங்கத்தினர்களை ஆப்பிரிக்க மாகாணச் சங்கங்கள், தேர்ந்தெடுக்கின்றன. ஆப்பிரிக்கரல்லாதார்கள், தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். 1957 ஆகஸ்டு மாதத்தில் சட்டசபைக்குத் தலைமை வகிக்க சபாநாயகர் ஒருவரை நியமனம் செய்ய அதிகாரமளிக்கப்பட்டது.

அரசியல் திட்டத்தை மாற்றியமைக்கும் முயற்சியை மேற்கொண்டுள்ள இந்தச் சமயத்தில் நியாஸாலாந்தில், அவசரகால ஆட்சிப் பிரகடனம் செய்யநேர்ந்திருக்கிறது. அரசியல் திட்டத்தைத் திருத்துவதுபற்றி, சென்ற சில மாதங்களாகவே பேச்சு வார்த்தை நடந்து வருகிறது.

# கவி ரவிந்திரநாத் தாகுர்

இந்திய நாகரிகம், கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை மிகவும் சிறந்த முறையில் உலகுக்கு எடுத்துக் காட்டிய பெருமை கவி ரவிந்திர நாத் தாகுருக்கே உரியதாகும். கவிஞர் எழுதிய இலக்கியப் பெருமையைப் பற்றி ஆராய்ந்த பின்னர்தான், அவரை மதிப்பிட வேண்டுமென்பதில்லை. கவிஞருடைய தோற்றமே அவருடைய பெருமையை எடுத்துக்காட்டுவதற்குப் போதுமானதாகும்.

இறந்த கணவனோடு மனைவி உயிரோடு உடன் கட்டை ஏறும் வழக்கத்தை அடியோடு ஒழிப்பதற்குப் பாடுபட்டவர்களில் ஒருவர் கவிஞரின் பாட்டனார் துவாரகநாத் தாகுர். ரவிந்தரநாத் தாகுரின் தந்தையார் தேவேந்திர நாத் தாகுர் பிரமசமாஜ இயக்கத்தில் சேர்ந்தார். கோயில் குருக்கள் புகுத்திய மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்து இந்து மதத்தைச் சீர்திருத்தம் செய்வதற்கு உதவினார்.

இத்தகைய செல்வச் சிறப்பு மிக்க முற்போக்கான உயர்குலத்தில் பிறந்த காரணத்தினால் மட்டுமே, தாகுர் பெருமை பெற்றதாகக் கொள்வதற்கில்லை. ஆனால் தாகுரின் உள்ளத்தில் அரும்பி மலர்ந்த சீர்திருத்தக் கருத்துக்களே அவரைப் புகழ் ஏணியில் படிப்படியாக உயரச் செய்தன. இலக்கியத்துறையில் உயரிய புலமையைப் பெற்ற இருவருக்கும் நோபல் பரிசு வழங்கப்

பட்டவுடன், தாகுரின் பெருமை உலகு முழுவதும் பரவியது. மக்கள் இவரைக் காண்பதற்குத் திரண்டு வந்தனர். அதன் பிறகு தான், இவரை நம் நாட்டினர் மிகவும் மதிக்கத் தொடங்கினர். 1913-ம் ஆண்டுக்கு முன், தாகுரின் பெருமையை நம் நாட்டினர் நன்கு உணர்ந்து மதிக்கவில்லை.

இதனால், 'அறிஞர் ஒருவர் தமது நாட்டு மக்களால் மதிக்கப்பெறுவது மிகவும் அரிது' என்ற உண்மை நன்கு புலனாயிற்று. எனவே அப்போது மக்கள் திரண்டு வருவதைக் கண்டு, "நீங்கள் எல்லோரும் திரண்டு வந்து இங்கு கூடியதற்குக் காரணம் என்ன? இவ்வளவு காலமாக உங்களுடைய பேரன்புக்கு உரியவனாக நடந்துகொள்ளத் தெரியாமல் இருந்த நான், இப்பொழுது மட்டும் உங்களை மகிழ்விக்கக் கூடிய விதத்தில் நான் செய்தது என்ன? இத்தகைய மதிப்பைப் பெறுவதற்குரிய தகுதி என்னிடம் இல்லைதான். ஆனால் வெளிநாட்டார் எனக்குக் கொடுத்த மதிப்புதான், நீங்கள் எல்லோரும் திடீரென்று திரண்டுவந்து என்னைப் பாராட்டும்படி தூண்டியது. அவ்வகையில், உங்களுக்கு என்னுடைய நன்றி உரியதாகும். எனினும் மேல் நாட்டு மதிப்பைப் பெற்றேன் என்பதற்காக, பாராட்டுவதை ஏற்று நான் மகிழ விரும்பவில்லை; மன்னிக்கவேண்டும்" என்று தாகுர் கூறினர்.

மேற்கூறிய தாகுரின் மொழி அப்போது பலருக்குப் புரியவில்லைதான். மக்களின் ஆரவாரமான போலி மனப்பான்மையை அவர் ஏற்க விரும்பவில்லை என்பது பிற்காலத்தில் இந்தியப் பல்கலைக்கழகங்கள் அவருக்குக் கௌரவ டாக்டர் பட்டம் வழங்க முற்பட்டபோதுதான் பெரும்பாலோர் தெளிவாகப் புரிந்துகொண்டனர்.

தாகுர் மிகவும் நாட்டுப் பற்றுடையவராக இருந்த போதிலும், புகழ் கருதி மேடைமீது ஏறிப் பேச விரும்ப வில்லை. நிரம்பிய புலமை பெறுவதிலும் ஒழுங்கு முறை யான வாழ்க்கையைக் கடைப்பிடிப்பதிலும் அவர் கருத் தைச் செலுத்தினர். கல்வி கற்கும் மாணவர்கள் அரசியல் போராட்டத்தில் ஈடுபடுவதை அறவே வெறுத்தார்; ஆனல் அரசியலில் ஈடுபட்டோரின் கடமையைப் பற்றி நன்கு அறிந்திருந்தார். நாடு விடுதலை பெறும் பொருட்டு காந்தியடிகள் கையாண்ட முறைகளைப்பற்றியும் பாராட்டி னர். சிறைச்சாலையை நாடிச் சென்ற தேசீயத் தலைவர் களைப் போற்றிப் புகழ்ந்தார்.

நாடு முழுவதும் ஒத்துழையாமை இயக்கம் நடந்த போது,மாணவர்கள் கல்லூரிகளையும் பள்ளிகளையும் விட்டு வெளியேறினர். தாகுர் அதைக் கண்டித்துப் பல கட்டு ரைகள் எழுதினர். ஆனல், மாணவர்கள் கவிஞரின் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. இது பற்றிக் கருத்து வேற்றுமையுடைய பலருங் கூடிப் பேசி முடிவுசெய்ய வேண்டுமென்று தாகுர் விரும்பினர். அவ்வாறே மாண வர்கள் தங்கள் கொள்கைக்கு ஆதரவான விஷயங்களை எல்லாம் எடுத்துக் கூறினர். முடிவில் வாக்கு எடுக்கப் பட்டது. காந்தியடிகள் தொடங்கிய ஒத்துழையாமை இயக்கம் மிகவும் பொருத்தமே என்பது பெரும்பாலோ ரின் முடிவு. கவிஞரை ஆதரித்த சிலரும் அடங்கிவிட் டனர். அதாவது மாணவர்கள், ஆசிரியரையே தங்கள் வழிக்குக் கொண்டு வந்தனர் என்பதாகும்.

எனவே,இக்கொள்கையைப் பற்றி இருதரப்பினரும் பேசிய பின், தாகுர் எழுந்து நின்று பேசினர்: "இன்று நானே வெற்றி அடைந்தேன்; ஏனென்றால், நான் கொண்ட கொள்கை தவறு என்பதை என்னுடைய

மாணவர்களே தைரியமாக எடுத்துச் சொல்ல முன்வந்தனர். ஆனால், தவறு என்று ஒப்புக்கொள்ளவில்லை. நான் தவறு என்று சொல்வதற்குரிய மனோதிடம் மாணவர்களாகிய உங்களுக்கு ஏற்பட்டதைப் பற்றி மிகவும் மகிழ்ச்சி. நீங்கள் ஒவ்வொருவரும் என்னுடைய கொள்கையிலிருந்து மாறுபட்ட நிலைமையில் இருப்பீர்களானாலும், சாந்திநிகேதனம் உங்களுடையதே. சாந்திநிகேதனத்தில் என்னுடைய கடமை என்னவென்றால், மாணவர்களின் மனம் சுதந்திர உணர்ச்சியோடு இயங்குவதற்கு வசதி செய்வதேயாகும். உலகத்தில் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டிய முக்கிய உரிமை இது. விஸ்வபாரதியின் நோக்கமும் இதுவேயாகும்.''

தாகூர் போன்ற பேரறிஞர்களால்தான் இவ்வாறு பேசமுடியும். தாகூர் சிறந்த ஒரு கல்விமானாக விளங்கியபடியால், மாணவர்களின் சிந்தனா சக்தியை அதிகப்படுத்துவதில் கருத்தைச் செலுத்தினார். பழமை வாய்ந்த இந்தியக் கலைகளின் தனிப் பெரும் பண்பு நலங்களை உணரும்படி செய்தார்.

''எனக்கு இந்திய நாட்டின்மீது அன்பு அதிகம்; பரந்த நிலப்பரப்புடைய பரத கண்டம் என்பதற்காக, நான் இதை போற்றுகிறேன் இல்லை; இந்திய மண்ணில் பிறந்த காரணத்திற்காக நான் நாட்டின் மீது அன்பு கொள்ளவில்லை; ஆனால் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய பேரறிஞர்கள் வகுத்த அறநெறி காலவேகத்தின் பல பூசல்களுக்கிடையே ஊடுருவிச் சென்று இன்னும் அதன் இளமை மணங் கமழ நின்று நிலவுவதைக் கண்டே நான் தாய்நாட்டின் மீது தணியாக் காதல் கொள்கின்றேன்'' என்று கூறினார்.

இதுபோன்ற மதிப்புரையைக் கேட்ட பேரறிஞர்கள் தாகூரின் பெருமையை அறிந்து அணுகினார்கள்.

அவர்களில் ஒருவர் தாம் நம்மதிப்பிற்குரிய பண்டிதநேரு. அவர் சமீபத்தில் பேசுகையில், தம்முடையவாழ்க்கையைச் செம்மைப்படுத்தியவர்கள் மூவரென்றும் (தமது தந்தை மோதிலால் நேரு, காந்தியடிகள்) அவர்களில் ஒருவர் தாகுர் என்றும் குறிப்பிட்டார்.

தாகுரின் புகழ் அவருடைய 80-வது வயதில் மிகவும் உச்ச நிலையை அடைந்திருந்தது. ''எண்பது ஆண்டு போதாது; நூறாண்டு வாழ இறைவன் அருள் புரிய வேண்டும்'' என்று காந்தியடிகள் தாகுருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பினர். தாகுர் இந்த வாசகத்தை மறக்க வில்லை. எனினும், அவர் சிறந்த ஒரு கலைஞரல்லவா! ''நன்றி; எண்பது வயது வரை வாழ்வு என்பது தகாது; நூறு வயது என்றால் அதற்குப் மன்னிப்பே கிடையாது'' என்று தாகுர் காந்தியடிகளுக்குப் பதில் அளித்தார். எமதூதர் கதவைத் தட்டும்பொழுதும் முதிர்ந்த முழு வாழ்வையும் அவனுக்கு வழங்குவதாகத் தாகுர் ஒரு கவி இயற்றியிருந்தார். அது தாகுர் வாழ்க்கையில் உண்மையாயிற்று.

# சதுரங்கம்

சதுரங்கம் உலகமெங்கும் பலர் அறிந்த விளையாட்டு. இந்தியா உலகுக்களித்த மாபெரும் விளையாட்டுக்களில் இது ஒன்று. இன்று வீடுகளிலும் பொழுது போக்குச் சங்கங்களிலும் தோட்டங்களிலும் பூங்காக்களிலும் மக்கள் இதை விளையாடக் காணலாம். இது லட்சக் கணக்கான மக்களின் விளையாட்டு. இளையோரும் முதியோரும் எல்லோரும் இதனை விரும்பி ஆடுகின்றனர். விளையாட்டில் மெய்ம்மறந்து விடுகின்றனர்.

இந்த விளையாட்டு உலகில் மற்ற இடங்களில் ஆடப்பட்டதாகத் தெரியும் காலங்களுக்கு முன்பே இந்தியாவில் இருந்தது என்பது சிறந்த ஆராய்ச்சியாளர்களுக்கும் ஒப்ப முடிந்த ஒன்றாகும். இந்த விளையாட்டின் பிறப்பிடம் இந்தியாவே என்று 1694ல் தாமஸ் ஹைட் என்னும் அறிஞர் எழுதிவைத்துப் போனார். ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலையில் கீழை நாட்டுக் கலைகளில் வல்லவர் அவர். சர் வில்லியம் ஜோன்ஸ் என்னும் அறிஞரும் 1783-89 ஆகிய காலத்தில் வெளியான ஆசிய ஆராய்ச்சிகள் என்னும் தமது நூலின் இரண்டாவது தொகுதியில் இதே கருத்தை ஆதரித்துள்ளார். சதுரங்கத்தைப் பற்றி நன்கு அறிந்த டன்கன்போர்ப்ஸ் என்னும் ஆராய்ச்சியாளர், சொல்லாராய்ச்சியின் துணை கொண்டு, இந்த ஆட்டம் இந்தியாவில் தோன்றியதே என்று கூறியுள்ளார்.

சதுரங்க ஆட்டம் இந்தியாவிலிருந்து பாரசீகத்துக் சென்று அங்கிருந்து மேற்கு நாடுகளுக்குப் பரவியது.

உலக முழுவதும் அது ஒரு சுற்றுச் சுற்றுவிட்டது. அது ஆங்கிலத்தில் "செஸ்" என்று பெயர் பெற்றது. இச் சொல் அரசனைக் குறிக்கும்"ஷா"என்னும் பாரசீக மொழியின் மரூவுச் சொல்லாகும். "செக் மேற்" என்னும் ஆங்கிலச் சொற்றொடரும் அரசன் மாண்டான் என்பதைக் குறிக்கும் "ஷா மாத்" என்னும் பாரசீகச் சொற்றொடரின் வழி வந்ததேயாகும்.

அமெரிக்க வரலாற்றின் போக்கே ஒரு சதுரங்க ஆட்டத்தினால் மாறிப் போயிற்று—அப்படி ஒரு கதை அமெரிக்காவிலுள்ள எண்பது, தொண்ணூறு லட்சம் சதுரங்க ஆட்டக்காரர் வட்டாரங்களிலே நடமாடுகிறது.

1776ம் ஆண்டு டிசம்பர் மாதம்; கடுங் குளிர்; நன்றாக உறை பனி விழுந்திருக்கிறது. அமெரிக்க விடுதலைப் போரின் ஆரம்பக் கட்டம். ஜெனரல் ஜார்ஜ் வாஷிங்டன் பென்சில்வேனியா ராஜ்யத்தில் பிலடெலபியா ஊருக்கருகே படைகளுடன் இருக்கிறார். எதிரே டெலாவேர் ஆற்றுக்கு அக்கரையில் நியூ ஜெர்ஸி ராஜ்யத்தில் டிரென்டன் என்னும் கிராமம் பிரிட்டிஷ் படைகள் கைவசம் இருக்கிறது. அப் படைகளைத் தாக்கத் தீர்மானித்தார் வாஷிங்டன்.

வாஷிங்டனுடைய திட்டம் எப்படியோ அமெரிக்க விடுதலையில் அவ்வளவு பற்றில்லாத அமெரிக்கர் இன்னொருவருக்குத் தெரிய வந்தது. இவர் டிரென்டனிலிருந்த பிரிட்டிஷ் தளபதிக்கு வாஷிங்டனின் தாக்குதல் திட்டத்தின் விவரங்களைக் குறிப்பிட்டு ஒரு சிறு கடிதம் எழுதி அனுப்பினார்.

அந்தக் கடிதம் கிடைத்தபொழுது பிரிட்டிஷ் தளபதி சதுரங்கம் ஆடிக் கொண்டிருந்தாராம். அவர், ஞாபக மறதியாய் அக் கடிதத்தை வாங்கி, பிறகு படித்துக்

கொள்ளலாம் என்று, தமது சட்டைப் பையில் போட்டுக் கொண்டு விளையாட்டைக் கவனித்தார்.

ஜெனரல் வாஷிங்டன் நள்ளிரவில் ஆற்றைக் கடந்தார்; டிரென்டனையும் கைப்பற்றினார்; வெற்றிமேல் வெற்றி கண்டு இறுதி வெற்றியும் அடைந்து, கடைசியில் அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியும் ஆனார். இவ்வளவும் எதனால்? சதுரங்க ஆட்டத்தினால்

அமெரிக்காவின் பெஞ்சமின் பிராங்ளின் சதுரங்க ஆட்டம் என்றால் உயிர். அது மட்டுமல்ல. அந்த ஆட்டத்தில் ஈடுபடுவோர் கடைப் பிடிக்கவேண்டிய ஒழுக்க விதிகள் பற்றியும் அவர் ஒரு புத்தகம் எழுதியுள்ளார்.

அமெரிக்காவின் மூன்றாவது ஜனாதிபதி தாமஸ் ஜெபர்ஸன், ஐந்தாவது ஜனாதிபதி ஜேம்ஸ் மன்ரோ ஆகிய ஆதிகால அமெரிக்கர்களும் சதுரங்க ஆட்டத்தில் திளைத்தவர்களே. மாபெரும் விடுதலை வீரர் ஆபிரகாம் லிங்கனும் பண்டைய அமெரிக்கச் சதுரங்க ஆட்டக்காரர் வரிசையில் காணப்படுகிறார்.

இருந்தாலும், 1857 வரை அமெரிக்க நாட்டில் சதுரங்கத்தில் தேசீயப்போட்டி நடத்துவதற்கு ஏற்ற போதிய ஆர்வம் ஏற்படவில்லை. அந்த ஆண்டு, பால் சார்ல்ஸ் மார்பி என்னும் இளைஞர் முதல் அமெரிக்கச் சதுரங்க மன்னராக முடி சூடினார். அதற்கு அடுத்த ஆண்டு, இருபத்தொருவயதே ஆன இந்த வாலிபர் ஐரோப்பாவில் சதுரங்கவேந்தர்களாக விளங்கியவர்களைப் போட்டியில் வென்று பாரிஸ் நகரில் உலகச் சாம்பியனாக வாகை சூடினார். அவரைச் சதுரங்க மேதை என்று பலரும் கருதினர்; இவ் விளையாட்டில் பெரும் புகழ் அடையப் போகிறார் என்று ஜோசியம் கூறினர். எனினும் இளைஞர் மார்பி அதன்பின் சதுரங்க ஆட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவே இல்லை.

மார்பியின் காலத்துக்குப் பிறகு,அமெரிக்கர் ஒருவரும் சதுரங்கத்தில் உலக வெற்றி பெறவில்லை. பலர் அதற்கு முயன்றுள்ளனர். போன ஆண்டு ராபர்ட் பிஷக் என்னும் பதினைந்துவயதுப் பள்ளிமாணவன் சர்வதேசச் சதுரங்கப் போட்டிப் பந்தயத்தில் கலந்து கொள்ளும் தகுதி பெற்று விட்டான். நியூயார்க் ராஜ்யத்தில் புருக்லின் என்னும் ஊரில் உள்ள இம்மாணவன்போல் உலகில் வேறு எவரும் இவ்வளவு சிறு வயதில் இப் புகழ் பெற்றதில்லை.

சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் யூகோஸ்லாவியா வில் நடந்த சர்வதேசச் சதுரங்க சம்மேளனத்துப் பல மண்டலப் போட்டியில் இந்த அமெரிக்க மாணவர் இன் னொருவருடன் ஐந்தாவதாக வந்தார். ஆகவே இனி நடக்க விருக்கும் சர்வதேசப் போட்டியில் அவர் கலந்து கொள்ளலாம். இப்போட்டியில் வென்றவரே 1960ல் ருஷ் யாவின் மிக்கேல் போட்வின்க்கை எதிர்த்து உலக விரு துக்குப் போட்டியிடுவார்.

காலஞ்சென்ற விஞ்ஞானமேதை ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் சதுரங்க ஆட்டத்தில் வல்லவர். தபால்மூலம் சில்லறை விற்பனை செய்யும் மாபெரும் ஸ்தாபன மாகிய சீயர்ஸ், ரோபக் அண்ட் கம்பெனியின் தலைவர் லெஸ்ஸிங் ஜே. ரோஸ் வால்டு ஒரு சிறந்த சதுரங்க ஆட்டக்காரார். காலஞ் சென்ற ஹாலிவுட் நட்சத்திரம் ஹம்பிரி போகர்ட் டும் சதுரங்க ஆட்டத்தில் வன்மை படைத்தவர்.

பொருளாதார நிலையிலும் சமூக நிலையிலும் அரசியல் நிலையிலும் மக்களுக்குள் இருக்கக் கூடிய உயர்வு தாழ்வுக ளெல்லாம் சதுரங்கக் கட்டத்தின் இரு சார்பிலும் அமர்ந் ததும் பறந்துவிடும்.

# தேசீய ஒழுங்குக் கட்டுப்பாடு

இளைஞர்களிடையே பரவிக் காணப்படுகிற கட்டுப்பாடின்மையானது இந் நாட்டில் சமீப காலமாக எல்லாருக்குமே கவலையை உண்டாக்கியிருக்கிறது. அக் கட்டுப்பாடின்மையானது, எதிர்ப்புணர்ச்சி, கல்வித் துறை அதிகாரிகளிடம் மரியாதைக் குறைவு, நேரிய வழியில் நடக்கவேண்டும் என்ற தூண்டுதல் அல்லது லட்சியம் இல்லாதிருத்தல் ஆகிய பல் வேறு ரூபத்தில் வெளிப்படுகிறது.

அது ஏதோ தாற்காலிகமாகமான ஒரு குறைபாடு என்றும் காலப் போக்கில் திருந்திவிடும் என்றும் சிலர் கருதுகிறார்கள்; ஆனால் அது ஓரளவுக்குத் தான் அப்படி. அதற்கு வேறு பல நிச்சயமான காரணங்களில் முதலாவதாக, ஆசிரியர்கள் போதுமானபடி தலைமை வகித்து நடத்த முடியாமலிருப்பதாகக் காணப்படுகிற நிலையைக் குறிப்பிடலாம். சொந்தப் பிரச்னைகளில் மூழ்கியிருக்கும் அந்த ஆசிரியர்களுக்கு மாணவரின் கல்விக்கு அடிப்படையாகத் தேவைப்படுகிற ஒரு "பிடிப்பு" இல்லை. இரண்டாவதாக, மாணவர்களிடையே வளர்ந்து வருகிற வகுப்பு விசுவாச உணர்ச்சியானது அதைவிட மேலான தேச விசுவாசம், தேசப் பொது பாரம்பரியத்திடம் உள்ள விசுவாசம் ஆகியவற்றை அழித்துவிடுகிறது. மூன்றாவதாக அரசியல்,பொருளாதாரபிரச்னைகளிலும் நிகழ்ச்சிகளிலும் மாணவர்களுக்கு ஏற்பட்டு வருகிற தீவிர கரிசனையை, கவலையூட்டுமளவுக்கிருக்கிற கரிசனையைக் குறிக்கலாம்,

அரசியல், பொருளாதாரப் பிரச்னைகள் பள்ளிக்கூடப் பாடவிஷயங்களாகவும் விவாத விஷயங்களாகவும் இருப்ப தற்குப் பதிலாக,வாழ்க்கைக்குத் தயாராக முயலும் தங்கள் செயலின் முழு அர்த்தத்தையும், பின் விளைவுகளையும் சிந்திக்காமல் ஈடுபடுகிற கிளர்ச்சிக்குக் காரணமாகிவிடு கின்றன; வேறு சில காரணங்களும் இருக்கின்றன. தற் காலக் கல்வி முறையைப் பொதுவாக எல்லோரையும் "குமஸ்தாவாக்கும் கல்வி முறை" என்று கண்டனம் செய் வதும் இன்னொரு காரணமாக இருக்கலாம். ஏனென்றால் அத்தகைய கண்டனம் இளைஞர்களின் மன ஊக்கத்தைக் கெடுக்கிறது.

உயிர் துடிப்பும் ஜீவ சக்தியும் நிறைந்த இளைஞர்கள் குறைபாடுகளைத் தாங்களாகவே சரி செய்துவிட முயல் கிறார்கள் என்கிற ஓர் அம்சம் இதில் நமக்குச் சந்தோஷ மளிக்கக்கூடிய அம்சமாகும். இப்பிரச்னையை எப்படி சமாளிக்கலாம் என்பதற்கு அது நமக்கு ஒரு குறிப்பைக் காட்டுகிறது. இந்திய இளைஞர்களிடையே காணப்படுகிற அந்த சுய முயற்சி மனப்பான்மையையும், சக்தியையும் ஊக்குவித்து அவற்றை நாட்டின் க்ஷேம நல வேலைகளில் திருப்பிவிடவேண்டும்; சிறந்த பிரஜைகளாக்குவதற்கும், எதிர்காலத்தில் சிறந்த தலைமையை உருவாக்குவதற்கும் அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

அதைத் தான் தேசீய ஒழுங்குக் கட்டுப்பாட்டு திட்ட மும் செய்ய விரும்புகிறது. அதன் முதல் நோக்கம் உடற் பயிற்சியின் மூலம் சிறுவர்களைத் தகுதியுள்ளவர்களாக்கு வதாகும். "வலுவான உடம்பில் தெம்பான மனத்தை ஏற் படுத்துவது" அதன் லட்சியம். ஒழுங்குக் கட்டுப்பாட்டுப் பயிற்சிக்கு, விளையாட்டுகள், அணிவகுப்புகள், ஆட்டப் பந்தயங்கள் ஆகியவை மூலம் கிடைக்கிற உடற் பயிற்சி

அடிப்படை அம்சமாகும். ஒழுங்குக் கட்டுப்பாட்டுப் பயிற்சி குழந்தைகளின் பள்ளி வாழ்க்கையில் முறையான ஒரு பகுதியாக இருக்கும். விடு முறை காலங்களிலுங்கூட குழந்தைகள் உல்லாச யாத்திரை சமுதாய வேலை ஆகிய வற்றில் கலந்துகொள்ள ஊக்குவிக்கப்படுவார்கள். அது அவர்களது சக்திக்கு உட்பட்ட வேலைகளாகவே இருக்கும். இந்தச் செயல் முறை இரும்புப் பிடிப்புக் கட்டுப்பாடாக ஆகிவிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

குழந்தைகள் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில், சொற்பொழிவுகள், யாத்திரைகள், நிதர்சனக் காட்சிகள் ஆகியவை மூலம் அவர்களுக்குச் சகிப்புத் தன்மை, நல் லுணர்வு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை ஆகியவை ஏற்பட வழிசெய்யப்படும். இதுதான் இந்த இயக்கத்தின் இரண்டாவது நோக்கமாகும்.

கூடுமானமட்டிலும் போதனாசிரியர்களின் நேரடி போதனையைக் குறைத்து, காட்சி, அனுபவங்கள் மூலம் குழந்தைகள், தாங்களே பல விஷயங்களையும் நேரடியாய்த் தெரிந்து கொள்வதன் முக்கியத்துவம் எல்லா கட்டங்களிலும் வற்புறுத்தவேண்டும்.

இத்தகைய பயிற்சி மூலம், எதிர்காலப் பிரஜைகள் கட்டுத்தளை அதிகமில்லாத, மனவிலங்கில்லாமல், முரட்டுத்தனமோ, ஆதிக்கப்போக்கோ இல்லாமல் அதிக அளவுக்குச் சகிப்புத் தன்மையும் நல்லுணர்வும் காட்டி தேசீய சேவை செய்யத் தகுதியுடையவர்களாக விளங்குவார்கள்.

நெருக்கடி காலத்தில் தேசத்தைப் பாதுகாப்பதற்கு மாணவர் படையினர் தயாராக இருக்கவேண்டுமென்று 1954-ல் தேசீய மாணவர் படையினரிடையே பேசும் போது பிரதம மந்திரி நேரு குறிப்பிட்டதை ஒட்டித் தான் தேசீய ஒழுங்குக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நடை

முறையில் கொண்டு வருவதற்கான யோசனை பிறந்தது. இத்திட்டத்தை முதலில் உருவாக்கிய அப்போதைய புனர்வாழ்விப்புத் துணை மந்திரி ஜே. கே. பான்ஸ்லே ஜப்பானிலும் இதர நாடுகளிலும் தாம் தெரிந்துகொண்ட விஷயங்களையும் அனுபவங்களையும் அங்கே மாணவர்களுக்கு ஒழுங்குக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தைப் போதிப்பதற்குக் கையாளப்படுகிற முறைகளையும், அங்கே இந்த ஒழுங்குக் கட்டுப்பாட்டு உணர்ச்சி, அதன் மூலம் ஏற்படுகிற விசுவாச உணர்ச்சி, தியாக புத்தி ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு தேசத்தின் சிறப்பு உருவாக்கப்பட்டிருக்கும் விதத்தையும் முன் மாதிரியாக வைத்து இத்திட்டத்தை வகுத்தார்.

அந்தத் திட்டத்தை, ஸ்ரீ பான்ஸ்லே, முதன்முதலாக டில்லியில் உள்ள "கஸ்தூரிபா நிகேத"னில் துவக்கி வைத்தார். ஆதரவற்ற விதவைகள், அவர்களின் குழந்தைகள், அனாதைகள் ஆகியவர்களுக்கான நிலையம் அது. 1954-ம் வருஷம் பிரதம மந்திரி "கஸ்தூரிபா நிகேதனுக்கு" விஜயம் செய்து. பயிற்சியாளர்களின் அணிவகுப்பொன்றைப் பார்வையிடும்போது அந்தத் திட்டத்தின் பலன்களை நேரில் கண்டார். அவருக்கு மிக்க திருப்தி ஏற்பட்டது; அதனால் அவர் அத்திட்டத்தை இந்தியா முழுவதிலும் விஸ்தரிக்கும்படி யோசனை கூறினார்.

அத்திட்டத்துக்கு பொது மக்களிடையே கிடைத்த ஆதரவினால் ஊக்கமடைந்து அதை டில்லியில் மட்டுமின்றி, பார்தாபாத், ராஜ்புரா, உல்ஹாஸ் நகர் (பம்பாய்) ஜலந்தர் ஆகிய இடங்களுக்கும் விஸ்தரிக்க ஏற்பாடு ஆகியது. முதலில் 19 நிலையங்களில் 24,881 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கும் வேலை தொடங்கியது. பிறகு 40,000 குழந்தைகள் இத்திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்றார்கள்.

அவர்களில் 15,000 டில்லியிலும், 10,000 பேர் பஞ்சாபிலும், 2,000 பேர் பெப்சுவிலும், 2,000 பேர் சௌராஷ்டிராவிலும், 4,000 பேர் பம்பாயிலும், 7,000 பேர் மேற்கு வங்காளத்திலும் இருந்தார்கள். இறுதியில் 69,000 குழந்தைகள் தேசீய ஒழுங்குக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் நன்மைகளை அடைந்தார்கள்.

இந்தத் திட்டம் இப்போது பஞ்சாப், பம்பாய், மேற்கு வங்காளம், டில்லி, மத்தியப் பிரதேசம், ஜம்மு-காஷ்மீர் இன்னும் உத்தரப் பிரதேசத்திலுள்ள சில பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றில் நடைபெற்று வருகின்றன. நடப்பு வருஷ முடிவுக்குள், இந்தத் திட்டம் நடைபெறுகிற பள்ளிகளின் எண்ணிக்கை 200 ஆகவும், அதனால் பலனடைகிற மாணவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்துக்கு அதிகமாகவும் ஆகிவிடும். டில்லியில் மாளவியா நகரில் ஒன்றும், பாரிதாபாத்தில் ஒன்றுமாக இரண்டு பயிற்சி நிலையங்களைப் போதனையாளர் பயிற்சிக்காக ஏற்படுத்தியிருக்கிறது. இப்பயிற்சி மூன்று மாதம் நடக்கும்; அந் நிலையத்தில் பயிற்சி பெற்ற சுமார் 800 போதனையாளர்கள் இப்போது பல்வேறு இடங்களில் பணியாற்றி வருகிறார்கள்.

# உலக பாங்கி-செலாவணி நிதி

உலக பாங்கி சர்வதேச செலாவணி நிதி—இவற்றின் ஆண்டுக் கூட்டம் புது தில்லியில் நடந்தது. இதில் 70 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். பின் தங்கிய நாடுகளுடைய முன்னேற்ற திட்டங்களுக்கு நிதி வசதி தருவதே உலக பாங்கியின் முக்கியப்பணி;வியாபார மிச்சச் சிக்கல்களுக்காளான நாடுகளுக்குச் செலாவணி வசதியைத் தருவதே செலாவணி நிதியின் முக்கியப்பணி. இந்த இரு ஸ்தாபனங்களும் கடனுக நிதி உதவி தருகின்றன. இதனுல் தற்காலிகச் சிக்கல்களை வெல்ல முடிகிறது. இந்த ஸ்தாபனங்களின் மூலதன வாய்ப்பை அதிகரிக்க வேண்டும் என்று தில்லிக் கூட்டம் முடிவு செய்தது. உலகத்தின் பொருளாதாரத் தோற்றம் மாறிவரும் இந் நாளில், இந்த ஸ்தாபனங்களுடைய பணி அவசியமாகி விட்டது. ஸூயஸ் நெருக்கடி ஏற்பட்டபோது தற்காலிகச் சிக்கல்களை சமாளிக்க,பிரிட்டன் சர்வதேச செலாவணி நிதியின் உதவியை நாடிற்று. சென்ற ஆண்டில் பிரான்ஸூம், இந்தியாவும் வேறு சில நாடுகளும் இந்த ஸ்தாபனங்களிடமிருந்து கடன்உதவி பெற்றன. இதனுல் நிதியின் தங்கம்-டாலர் இருப்புத் தொகை குறைந்தது. அங்க நாடுகள் அனைத்துக்கும் உதவும் நிலையைப் பெற வேண்டுமானுல், இந்த இரு ஸ்தாபனங்களின் மூலதனம் பெருகவேண்டும் என்பது சென்ற ஆண்டு நடவடிக்கைகள் தந்த படிப்பினையாகும்.

சென்ற ஆண்டில், அமெரிக்கச் சந்தையில் மந்த மேற்பட்டதால் பல நாடுகளின் வாணிபம் பாதிக்கப்பட்டது. விளைபொருள்களின் விலை வீழ்ந்ததால் அவற்றை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் செலாவணி பாதிக்கப்பட்டது. எதிர்பார்த்தபடி அமெரிக்கா தனது இறக்குமதியைக் குறைக்கவில்லை. இதனால் புதிய சிக்கல்கள் தோன்றாது ஒழிந்தன.

பின்தங்கிய நாடுகளில் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், தொழில் வளமுள்ள நாடுகளில் பொருளாதார விஸ்தரிப்பு செய்யவும், உலக செலாவணி அமைப்பு வலுப் பெறுவது அவசியம் என்பது பொருளாதார நிபுணர்களின் ஏகோபித்த கருத்து. சென்ற ஜூன் மாதம் வாஷிங்டனுக்கு விஜயம் செய்த போதும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி மாக்மில்லன் இதை வற்புறுத்திப் பேசினார். ஜனாதிபதி ஐஸன்ஹோவர் உலகபாங்கி-செலாவணி நிதி இவற்றின் மூலதன வசதியை அதிகரிப்பது பற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ள சென்ற ஆகஸ்டு மாதம் முடிவு செய்தார். இதை மாண்ட்ரீலில் நடந்த காமன்வெல்த் பொருளாதார மகாநாடு ஆதரித்தது. புது தில்லியில் நடந்த கூட்டத்தில் இந்தப் பிரச்னை விவாதத்திற்கு வந்தபோது அமெரிக்காவின் யோசனையை ஆதரித்து பிரிட்டிஷ் நிதி மந்திரி பேசினார்.

சென்ற ஓராண்டில் நிலைமை மாறிவிட்டது. பிரிட்டனுடைய தங்கம்-டாலர் இருப்புத் தொகையும் கணிசமான அளவுக்கு அதிகரித்தது. சென்ற மூன்றாண்டுகளாக, பிரிட்டனுக்கு உலக வாணிபத்தில் நல்ல மிச்சமுண்டு. இப்போது இந்த வியாபார மிச்சம் குறிப்பிடத்தக்க அளவுக்குப் பெருகியிருக்கிறது. இது ஏற்றுமதிப் பெருக்கத்தின் விளைவுதான்.

சென்ற ஆண்டில் ஸ்டர்லிங் பிரதேச இருப்புத் தொகை குறைந்ததால் சிக்கல்கள் கிளைத்தன. உலக வாணிபத்தில் ஸ்டர்லிங் நாணயத்திற்கு முக்கியஇடமிருப் பதால் அதன் மதிப்பைக் காப்பதில் பிரிட்டிஷ் சர்க்கார் தனி அக்கறை காட்டுகிறார்கள்.

உலக வாணியம் பெருகி வரும் இந்நாளில் செலாவணி வசதி பெருகுவதும் அவசியம். இதற்கு சர்வதேச செலாவணி நிதியையும் உலக பாங்கியையும் பலப்படுத்து வது அவசியம். பிரிட்டனும் காமன்வெல்த் நாடுகளும் (மான்ட்ரில் மகாநாட்டின் மூலம்) இந்த நோக்கதிற்கு ஆதரவு தந்துள்ளன. சர்வதேச செலாவணி நிதி விஸ்தரிப்பால் உலக வாணிபம் வளரும்; நாணய மாற்றுச் சிக்கல்கள் குறையும். செலாவணி நிதிச் சந்தாவை 50 சதம் அதிகரிக்கவேண்டும் என்று யோசனை கூறப்படு கிறது. பிரிட்டன் தான் செலுத்தும் பங்கில் ஒருபகுதியைத் தங்கமாகச் செலுத்தவேண்டும். இதன் மதிப்பு 162,500,000 டாலர். உலக பாங்கிக்குச் செலுத்தும் தொகையை யும் அதிகரிக்கக் கோரியிருக்கிறார்கள். ஆனால் இதைப் பணமாகச் செலுத்தவேண்டியதில்லை. உலகச் சந்தையில் பாங்கி எழுப்பும் கடனுக்கு உத்தரவாதம் கொடுத்தால் போதும்.

# உருக்கு உற்பத்தி

உருக்கு பிரதானமாய் இரும்பும் கரி மூலமும், (கார்பனும்) சேர்ந்த ஓர் உலோகக் கலவையேயாகும். அதைப் பல்வேறு அளவில் உறுதியும், தரமும் உள்ளதாகச் செய்வதற்காக அதனுடன் மாங்கனீஸ், சிலிகன், குரோமியம், வனேடியம் போன்ற உலோகங்கள் ஓரளவுக்குச் சேர்க்க வேண்டும். இரும்பு இயற்கையில், இரும்பு ஆக்சைட் ரூபத்தில்தான் கிடைக்கிறது. மண், கந்தகம், பாஸ்பரஸ் போன்ற இதர கனிப் பொருள்கள் ஆகியவற்றுடன் கலந்ததாக அது நமக்குக் கிடைக்கிறது. எனவே உருக்கு உற்பத்தி செய்வதற்கு, இந்த இயற்கை அமைப்பிலிருந்து இரும்பைப் பிரித்தெடுத்து, அத்துடன் கரி மூலத்தையும் இதர கலவைப் பொருள்களையும் தேவையான அளவுக்குச் சேர்க்கவேண்டும்.

ஆரம்ப காலத்தில் இரும்பை இதர பொருள்களிலிருந்து பிரித்தெடுப்பதற்குக் கட்டைக்கரி நெருப்பை உபயோகித்தார்கள். பெருகிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இந்த முறையைக் கொண்டால் முடியாது. மலிவாகவும், ஏராளமாகக் கிடைப்பதுமான எரி பொருள் ஒன்றை இதற்குப் பயன்படுத்த வேண்டுமென்று 18–ம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் நிபுணர்கள் உணர்ந்தார்கள். நிலக்கரியைத் தவிர வேறு எது இதற்கு இவ்வளவு பொருத்தமாக இருக்கமுடியும்?

ஆனால் நிலக்கரியில் தேவையான உறுதியும், ரசாயனத் தன்மைகளும் இல்லை. எனவே அதனை அத்தன்

மைகளைப் பெறுவதற்காக "கோக்" கரியாக மாற்றுகிறார்கள். இந்தக் கோக் கரி இரும்பு தாதுவுடன் சேர்த்து எரியும்போது கோக் கரியில் உள்ள கரிமூலப் பொருள் இரும்பு தாதுவில் உள்ள பிராண வாயுவுடன் கலந்து "கார்பன் மானாக்சைட்" வாயுவாக மாறி வெளியேறுகிறது. கந்தகம்,பாஸ்பரஸ்,மண் போன்ற இதர பொருள்களை அகற்றுவதற்குச் சுண்ணாம்புக் கல்லைச் சேர்க்கிறார்கள். அது அப்பொருள்களை ஒன்று சேர்த்துக் கழிவுக் குழம்பு ரூபத்தில் வெளிப்படுத்துகிறது.

ஆகவே சகல பகுதிகளும் இணைந்த உருக்குத் தொழிற்சாலையில் பின்வரும் நான்கு பிரதான பகுதிகள் இருக்கும்.

1. கோக் கரி அடுப்புகள்: நிலக்கரியை கோக் கரியாக மாற்றுவதற்கானது.

2. ஊது உலைகள் (பிளாண்ட் பர்னஸ்): இரும்புக் கனியைத் தனி இரும்பாகப் பிரித்து எடுப்பதற்கானது.

3. உருக்கு உருக்கும் பிரிவு: இரும்பைக் கரிமூலத்துடனும் இதர உலோகங்களுடனும் கலந்து உருக்கை உற்பத்தி செய்வதற்கானது.

4. தகடு அறைக்கும் ஆலைகள்: உருக்கை விற்பனைக்குத்தோதான பொருள்களாகத் தயாரிப்பதற்கானது.

உருக்குத் தொழிற்சாலையில் இவை தவிர, மின்சார உற்பத்தி நிலையம், ஊது உலைகளில் உச்சவேகத்தில் காற்றைச் செலுத்தி ஊதுவதற்கான "புளோயர்" சாதனம், பிரதான உருக்குத் தொழிற்சாலையைப் பழுதுபார்த்துப் பராமரித்து வருவதற்கான கட்டுமானப் பட்டறைகள், யந்திரத் தொழிற்சாலைப் பட்டறைகள், தண்ணீர்

கிடைக்கச் செய்வது, அதைக் குளிரவைப்பது ஆகியவை களுக்கான ஏற்பாடுகள், சோதனைகளையும், பரீட்சைகளை யும் நடத்துவதற்கான ஆய்வுக்கூடங்கள், மூலப் பொருள் களைச் சேமித்துவைப்பதற்கான சேமிப்பு ஏற்பாடுகள், பராமரிப்பு வேலை, ஸ்டோர் சாமான்கள், நிர்வாக வேலைக் கான காரியாலயங்கள் முதலிய இதர ஏற்பாடுகளும் இருக்கும்.

பத்து லட்சம் டன் கச்சா உருக்கை உற்பத்தி செய் வதற்குச் சுமார் 17·5 லட்சம் டன் இரும்புக் கனியும் சுமார் 17.5 லட்சம் டன் நிலக்கரியும், 4 லட்சம் டன் சுண்ணும்புக் கல், டோலமைட், மாங்கனீஸ் கனி, கலவைக்கான பொருள் ஆகிய இதர பொருள்களும் தேவை.

இரும்புக் கனி, கோக் கரி தயாரிப்புக்கான நிலக்கரி ஆகியவற்றின் ஆதாரங்கள் அருகில் உள்ளதைப் பிர தான அம்சமாகக் கொண்டுதான் உருக்குத் தொழிற்சாலை யின் இடத்தை நிர்ணயிக்கவேண்டும். தண்ணீர் வசதி, போக்கு வரத்து சாதன சௌகரியம் ஆகிய இரண்டு அம் சங்களும் இதில் முக்கிய அம்சங்களாகும். புதிய உருக்குத் தொழிற்சாலைகளுக்காக ரூர்க்கேலா, பிலாய், துர்காப்பூர், ஆகிய இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. மேற் சொன்ன மூன்று அம்சங்களைக் கொண்டு பார்த்தால், பிரஸ்தாப ஸ்தலங்கள் அதற்கு மிகவும் ஏற்றனவாகும்.

உலகத்தின் பெரும்பாலான நாடுகளில், முக்கியமாக பிரிட்டன், ருஷ்யா, அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில், ஒருங்கிணைக்கப்பட்ட பெரிய உருக்குத் தொழிற்சாலைகளில்,உருக்கை உற்பத்தி செய்து வருவதே தற்போதைய போக்காக இருந்துவருகிறது. அளவு

பெரிதானல் உற்பத்திச் செலவு சிக்கனமாகிறது என்று தெரியவந்துள்ளபடியால் இவ்வாறு தொழிற்சாலே அளவு அமைந்து இருக்கிறது.

உருக்குத் தொழிற்சாலேகளின் அமைப்பு,பொதுவாக தேவைக்குத் தக்கவாறு நிர்மாணிக்கப் பெறுகிறது. அதாவது தொழிற்சாலேயின் ஒவ்வொரு பகுதியின் அளவும் தேவைகளின் தன்மையைப் பொருத்தும், மூலப்பொருள்கள் கிடைப்பதைப் பொருத்தும் அவற்றுக்குத் தக்கவாறு நிர்ணயிக்கிருர்கள்.

தொழிற்சாலேயின் பகுதிகளில் பெரும்பாலானவை தேவையின் தன்மையைப் பொருத்து எண்ணிக்கையை மாற்றிக்கொள்ளக்கூடிய பிரிவுகளேக் கொண்டதாக இருக்கிறது. கோக் கரி விஷயத்தில் தேவை பெருகினல் அதிகப்படியாக கோக் கரி உலேகளேச் சேர்த்துக்கொள்ளுகிருர்கள். இதுபோல்தான் ஊது உலேகள், திறந்த உலேகள் விஷயமும். உதாரணமாக, புதிதாக நிர்மாணமாகும் உருக்குத் தொழிற்சாலேகள் ஒவ்வொன்றிலும் மூன்று ஊதுஉலேகள் இருக்கும். ஒவ்வொரு ஊது உலேக்கும். அதற்குச் சரியான எண்ணிக்கைக்குக் கோக் கரி அடுப்பு வரிசைகள் இருக்கும்.

தகடு அறைக்கும் தொழிற்சாலேகள்

ஒரு தொழிற்சாலேயின் அளவை நிர்ணயிக்கும் பிரதான பகுதி அதன் தகடு அறைக்கும் பிரிவாகும். இங்கேயும் இறுதி வேலேப் பாட்டுக்கான தொழிற்சாலேப் பகுதிகள் கட்டிகளேத் தயாரிக்கும் பகுதிகளே இதில் முதலிடம் பெறுகின்றன. உற்பத்திப் பொருள்களின் அளவையும், தன்மையும் பொருத்து 13 லட்சம் டன் முதல் 15 லட்சம் டன் வரை உருக்குக் கட்டிகளே உற்பத்தி செய்யக்கூடிய

வகையில் அவற்றை ஒரு சீராக நிர்ணயிக்கும் வகையில் திட்டத்தை வகுத்திருக்கிறது.

13 லட்சம் டன் உருக்குக் கட்டிகளைக் கொண்டு சுமார் 10 லட்சம் டன்னுக்கு வேலை தீர்ந்த பொருள்களைத் தயாரிக்கலாம். எனவே, மூலப் பொருள்கள், ஜலம், மின்சாரம் ஆகியவை ஒழுங்காகவும், போதிய அளவுக்கும் கிடைத்து வருவது போன்ற இதர வசதிகள் இருந்து வந்தால், 10 லட்சம் டன் உற்பத்தி சக்தியுள்ள உருக்குத் தொழிற்சாலைகளை அமைப்பார்கள். இந்த உற்பத்தி சக்திக்கு மேற்பட்ட கட்டத்தில், விஸ்தரிப்பு பொதுவாக பிரிவுகளை இரட்டிப்பதன் மூலமும், சில சந்தர்ப்பங்களில், முக்கியமாக அமெரிக்கா, ருஷ்யா ஆகிய நாடுகளில் தொழிற்சாலைகளைப் பெருக்கி வருகிறார்கள்.

இருபது லட்சம் டன் உற்பத்தி சக்திக்கு மேற்பட்ட கட்டத்தில் வேறு பல சங்கடங்கள், முக்கியமாக போக்குவரத்து, மூலப் பொருள்களுக்காக கனிச் சுரங்கங்களையும், கற் சுரங்கங்களையும் இலாபகரமாக நடத்தி வருவது, நிர்வாக சௌகரியம் ஆகியவை போன்ற சங்கடங்கள் எழுகின்றன.

உயர்தர கனிப் பொருளோ, உயர்தர உலோக உபயோக நிலக்கரிகளோ இல்லாத சில நாடுகளில் "லோ–ஷாப்ட் பர்னெஸ்" எனப்படும் சிறிய உலைகளில் இரும்பை உற்பத்தி செய்ய சமீப காலத்தில் முயற்சி செய்து வருகிறார்கள்.

இந்த உலைகளில் நாளொன்றுக்கு 50 டன் வரையில் தான் இரும்பு உற்பத்தி செய்யலாம். இவற்றில் உற்பத்திச் செலவு மிகவும் அதிகமாக இருந்த போதிலும், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலும் உலோகத் துறை

உபயோகத்துக்கான நிலக்கரிகள் கிடைக்காத வேறு சில நாடுகளிலும், இவை இப்பொழுது அதிக அளவில் தான் இருக்கிறது. இந்த அதிகப்படி உற்பத்திச் செலவு உலோகத்துறை உபயோகத்துக்கான நிலக்கரிகளை வேறு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய ஆகும் செலவைக் காட்டிலும் குறைவாக இருப்பதால் அது ஈடுகட்டிக் கொள்ளுகிறது.

ஒரே சமயத்தில், சில டன்களே தேவையிருக்கக் கூடிய பிரத்தியேக ரக கலவை உருக்கு, விசேஷ உருக்கு வகைகளின் உற்பத்திக்குச் சிறு உற்பத்திப் பகுதிகளே பெரிதும் விரும்பத்தக்கன.

# நாட்டு வைத்திய முறை

ஆயுர்வேதம், யூனானி முதலிய நாட்டு வைத்திய முறைகளின் அபிவிருத்தி சம்பந்தமாக, தேசீய திட்டக் கமிட்டியும், 1948-ம் ஆண்டில் நடைபெற்ற சுகாதார மந்திரிகளின் மகாநாடும் தீர்மானங்களை நிறைவேற்றியதையடுத்து, இந்திய சர்க்கார், இந்த வைத்திய முறைகளின் சிறந்த அம்சங்களை ஏற்று அவற்றின் அபிவிருத்திக்காக ஆராய்ச்சியை ஊக்குவித்து வருவதென்றும், அந்த வைத்திய முறைகளில் விஞ்ஞான ரீதியில் பயிற்சியளிப்புக்கு ஏற்பாடு செய்வதென்றும் முதன் முதலாக முடிவு செய்தது.

மகாநாடு தெரிவித்த சிபாரிசுகளை அனுசரித்து இந்திய சர்க்கார் நாட்டு வைத்திய முறைகளின் அபிவிருத்திக்காக, கடந்த பத்து ஆண்டுக் காலத்தில் சில முக்கியமான நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கின்றது. நாட்டு வைத்திய முறைகளுக்கான மத்திய ஆராய்ச்சி நிலையமும், ஜாம் நகரில் ஆயுர்வேத வைத்திய முறைக்கான மத்திய ஆராய்ச்சி நிலையமும் ஏற்பட்டுள்ளன. இந்த வைத்திய முறைகளில் புதிதாகக் கல்லூரிகளை ஏற்படுத்துவதற்காகவும், ஏற்கெனவேயுள்ளவற்றைத் தரமேம்பாடு செய்வதற்காகவும் ராஜ்ய சர்க்கார்களுக்கு மத்திய நிதி உதவி கிடைத்திருக்கிறது. நாட்டு வைத்திய முறைகளின் அபிவிருத்திக்காக ராஜ்ய சர்க்கார்களுக்கு 1958 ஜனவரியில் நடைபெற்றமத்திய சுகாதார கௌன்சிலின் தீர்மானத்தை அனுசரித்து அவை கருதும் அவசியமான ஏற்பாடுகளைச் செய்ய அனுமதி கிடைத்திருக்கிறது.

இத்துறையில் நடந்துள்ள பல நிகழ்ச்சிகளின் பலனாகவே இக்கொள்கைகள் உருவாகியிருக்கின்றன. நாட்டு வைத்திய முறைகளின் சகல அம்சங்கள் பற்றிச் சிபாரிசுகளைச் செய்வதற்காக, 1846-ம் ஆண்டில் ஸ்ரீ ஆர். என். சோப்ராவின் தலைமையில் கமிட்டியொன்றை நிறுவியது, இந்நிகழ்ச்சியில் முதலாவதாகும். அக்கமிட்டியின் அறிக்கையைப் பொது அம்சத்தில் இந்திய சர்க்கரார் ஏற்றுக்கொண்டது.

பண்டிட் கமிட்டி

சுகாதாரத்துறை சம்பந்தமாக இந்தியா முழுவதுக்குமான ஒரு கொள்கையை வகுப்பது பற்றி இந்திய சர்க்கார் 1949-ல் ஆராய்ந்தது. அதன் பலனாக, ஆயுர்வேத யூனானி வைத்திய முறை ஆராய்ச்சி நிலையமொன்றை ஏற்படுத்துவதற்காக விரிவான திட்டமொன்றை வகுப்பதற்காகவும்,நவீன வைத்திய முறைகள் போதிக்கப்பட்டு வரும் கல்லூரிகளிலும், அவற்றைப் போதித்து வருவதற்கான வழி வகைகள் பற்றி யோசனைகளைக் கூறுவதற்காகவும் டாக்டர்ஸி. ஜி. பண்டிட்டின் தலைமையில் மற்றொரு கமிட்டியை அமைத்தது.

ஜாம் நகரில் நாட்டு வைத்திய முறைகளுக்கான ஆராய்ச்சி நிலையமொன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்று கூறிய சிபார்சு தான் பண்டிட் கமிட்டியின் சிபாரிசுகளில் மிகவும் முக்கியமானதாகும். நவீன வைத்திய முறைகளைப் பயின்ற மாணவர்களையும் நாட்டு வைத்திய முறையையும், ஒருங்கே போதிக்க வகை செய்வது சம்பந்தமாக, சர்வகலாசாலைகளில் வைத்திய சரித்திர ஆராய்ச்சிப் பதவிகளுக்கு (Chair) ஏற்பாடு செய்வதுதான் சிறந்த முறையென்று கமிட்டி கருத்து தெரிவித்தது. இத்திட்டத்தின்கீழ்தான் 1957-ம் ஆண்டில் சென்னை

சர்க்காருக்கு அதற்கான மொத்த செலவில் 75 சதவிகிதம் தொகை 7,200 ரூபாய்--மானியமாகக் கிடைத்தது.

மத்திய ஆராய்ச்சி நிலையம்

பண்டிட் கமிட்டி சிபாரிசுகளை அனுசரித்து, இந்திய சர்க்கார் ஜாம் நகரில் உள்ள குலாப் கன்வர்பா ஆயுர்வேத சங்கத்தின் கூட்டுறவுடன், ஏற்படுத்தியுள்ள நாட்டு வைத்திய முறை மத்திய ஆராய்ச்சி நிலையம் மனித குலம் முழுவதுக்கும் யாதொரு வித்தியாசமுமின்றி நாட்டுவைத்திய முறைகளின் பலன்கள் கிடைக்க வழி செய்வதற்காக ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஊக்குவித்து வருவதுடன், ஊழியர்களுக்கு ஆராய்ச்சி வேலை முறைகளைப் போதிக்கவும் பயிற்சி அளித்து வருகிறது.

1956-ம் ஆண்டில், இத்துறையில் பயிற்சி நிலையமொன்றும் ஜாம் நகரில் ஆரம்பித்தது. ஆரம்பத்தில் இந்த நிலையத்தில் இருபத்தைந்து மாணவர்கள் சேர்ந்தார்கள். நாட்டு வைத்திய முறைகளில் பட்டம் பெற்றவர்களும் அதில் சேர்ந்தனர். இந்த நிலையத்தில் பயிற்சி ஏற்பாடுகள் முழுவது ஆயுர்வேத வைத்தியமுறையிலேயே நடந்துவருகின்றன. அங்கு பயிலும் மாணவர்கள் ஆராய்ச்சி வேலைகளை அவர்களுடைய பயிற்சியின் ஒரு பகுதியாக மேற்கொள்ளவேண்டும். ஆயுர்வேதவைத்திய முறையில் உயர்ந்த படிப்புகளில் பட்டம் பெறுவதற்கான யோக்கியதாம்சத்தை அடைவதற்கு, இவர்களுக்கு அங்கு சகல வசதிகளும் கிடைக்கின்றன.

1954பிப்ரவரி மாதத்தில் ராஜ்கோட்டில் நடைபெற்ற மத்திய சுகாதாரக் கௌன்சில் கூட்டத்தில்இத்துறையின் அபிவிருத்தி சம்பந்தமாகத் தீர்மானமொன்று நிறைவேறியது மற்றொரு முக்கிய கட்டமாகும். ஆயுர்வேத, யூனுதி, ஹோமியோபதி வைத்திய முறைகளில் எந்த ஒரு

வைத்திய முறையிலும் தொழில் நடத்தி வருபவர்களாகப் பதிவு செய்யப்படாதவர்களை, வைத்தியத் தொழில் நடத்தக்கூடாதென்று தடை விதிப்பதற்காகவும் இந்த வைத்திய முறைகளில் தொழில் நடத்தி வருவதை ஒழுங்கு படுத்துவதற்காகவும் தகுந்த நகல் சட்டமொன்றைத் தயாரித்துகௌன்சில் புதிய நிர்வாகக் கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பிவைக்கும்படி மத்திய சுகாதார மந்திராலயத்துக்குச் சிபார்சு செய்தது இத் தீர்மானம்.

கல்வி போதனை

நாட்டு வைத்தியர்கள், ஹக்கீம்கள், ஹோமியோபதி வைத்தியர்கள் ஆகியோருக்கான கல்வி போதனை, அவர்கள் தொழில் நடத்துவதை ஒழுங்குபடுத்தி வருவது ஆகியவை சம்பந்தமாக ஒரே சீரான கொள்கையை வகுப்பதற்காக, சௌராஷ்டிரா சுகாதார மந்திரி தவேயின் தலைமையில், பம்பாய், மேற்கு வங்காளம், ஹைதராபாத், திருவாங்கூர்-கொச்சி ஆகிய ராஜ்யங்களின் சுகாதார மந்திரிகளை அங்கத்தினர்களாகக் கொண்டதொரு கமிட்டியை இந்திய சர்க்கார் நியமித்தது.

நாட்டில், ஆயுர்வேத, யூனானி, ஹோமியோபதி வைத்திய முறைகளைப் போதிப்பது விஷயத்தில் ஏற்கெனவே இருந்துவரும் வசதிகளைப் பரிசீலனை செய்வது இவற்றில் பயிற்சி வசதிகளைப் அபிவிருத்தி செய்வதற்காகவும், ஒரே சீரான கல்வித்தரங்களை ஏற்படுத்துவதற்காகவும் மேற்கொள்ளவேண்டிய குறிப்பான நடவடிக்கைகள் பற்றிச் சிபாரிசு செய்வது, இந்த வைத்திய முறைகளில் தொழில் நடத்துவதை ஒழுங்குபடுத்துவதற்கான யோசனைகளை—சர்க்கார் கட்டுப்பாடு உள்பட தெரிவிப்பது ஆகிய வேலைப் பொறுப்புகளை அக் கமிட்டி பெற்றது.

இத்துறை சம்பந்தப்பட்ட சகல அம்சங்களையும் ஆராய்ந்தறிந்த பின்னர், தற்போதுள்ள நிலவரங்களுக்கு மான ஒரு சீரான கொள்கையை நிர்ணயிப்பது சாத்திய மில்லையென்று கருத்துத் தெரிவித்து, ஆயுர்வேத வைத்திய முறையிலும், இதர நாட்டு வைத்திய முறைகளிலும் நடைமுறையில் சாத்தியமானதென்றும் விரும்பத்தக்க தென்றும் ராஜ்ய சர்க்கார் கருதும் நடவடிக்கைகளை நடத்தும்படியாக அது சிபாரிசு செய்தது. அதே சமயத்தில், இந்திய சர்க்காரும் ஆயுர்வேத, யூனானி, ஹோமியோபதி வைத்திய முறைகளிலும், இதர நாட்டு வைத்தியமுறைகளிலும் ஆராய்ச்சியைத் தீவிரமாக ஊக்குவித்து வர வேண்டுமென்றும் அது சிபாரிசு செய்தது.

மத்திய சுகாதார மந்திராலயம். இந்துறையில் ஆராய்ச்சி வேலைகளை ஊக்குவித்து வருவதோடுகூட நாட்டு வைத்திய போதனை நிலையங்களை ஏற்படுத்தி அவற்றை நடத்தி வருவதற்காக ராஜ்ய சர்க்கார்களுக்கு மானிய உதவியளித்து வருகிறது. பின்கண்ட காரியங்களுக்காக மத்திய நிதி உதவியளிக்கிறது (1) அங்கீகாரம் பெற்ற ஆராய்ச்சித் திட்டங்களை நடத்துவதற்காகத் தெரிந்தெடுக்கப் பட்ட நிலையங்களில் ஆராய்ச்சி காரியப் படுக்கைகளைப் பராமரித்து வருவதற்குப் படுக்கை ஒன்றுக்கு ஆண்டொன்றுக்கு 2000 ரூபாய் வீதம் நடைமுறைச் செலவுக்கு உதவி. (2) அந்தந்தத் திட்டங்களின் தகுதியைப் பொறுத்து விஷே அடிப்படையில் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதிஉதவி (3) ராஜ்யங்களில் ஏற்கெனவேயுள்ள போதனை ஸ்தாபனங்களைத் தரமேம்பாடு செய்வதற்குப் புதிய ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதற்கும் நிதி உதவி.

ராஜ்ய திட்டங்களில் ஏற்கெனவே சேர்க்கப்பட்டுள்ள போதனை ஸ்தாபனங்களை அபிவிருத்தி செய்வதற்காகவும்

மத்திய நிதி உதவி கிடைக்கிறது. கட்டிடச் செலவு உட்பட மூலதனச் செலவில் 75 சத விகிதமும் ஆஸ்பத்திரி நீங்கலாக நடைமுறைச் செலவில் 50 சதவிகிதமும் மத்திய உதவியாகக் கிடைக்கும்.

நாட்டு வைத்தியமுறைகளில் ஆலோசகர் ஒருவரை மத்திய சர்க்கார் நியமித்துள்ளது. நாட்டு வைத்திய முறைகளின் ஆராய்ச்சி அபிவிருத்தி சம்பந்தமாக ராஜ்ய சர்க்கார்களின் மூலமாக கல்வி ஸ்தாபனங்களிலிருந்து வரும் திட்டங்களைப் பரிசீலித்து மானிய உதவிக்குச் சிபார்சு செய்வதற்காக ஆயுர்வேத, யூனானி ஹோமியோபதி வைத்திய முறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் அடங்கிய மூன்று ஆலோசனைக் கமிட்டிகளை அமைத்திருக்கிறது.

# போலீஸ் கல்லூரி

போலீஸ் சாவடிகளுக்கு எத்தனையோ விதமான வழக்குகள் வந்து சேருகின்றன. கிராமத்திலேற்படுகிற சச்சரவு, கள்ளக் காதல், தனிப்பட்ட பகைமை ஆகியவை காரணமாக ஏற்படுகிற சண்டை, கொலை ஆகியவை அவைகளில் ஒருவிதமாகும். ஆனால், போலீசாரின் வேலைகள் பலதரப்பட்டவை. அவை சில்லரை விஷயங்கள் முதல் மிக முக்கியமான விஷயங்கள் வரை மனித வாழ்க்கையின் எல்லாவித அம்சங்களுக்கும் வியாபித்து நிற்கின்றன. சோகம், ஹாஸ்யம் முதலிய உணர்ச்சிகள் நிறைந்த விஷயங்களும் சில்லறை விஷயங்களும் அவர்களின் கவனத்துக்குவரும்.

இத்தகைய விஷயங்களில் ஈடுபட்டுக் கடமையைச் செய்வதற்குக் கெட்ட பெயர் வந்துவிடுமென்று பயமோ, மறைமுகமான லஞ்ச ஆசைகளுக்கு இரையாகும் தன்மையோ, சமூக பிரஷ்ட பயமோ அல்லது உடலுக்கும் உயிருக்கும் அபாயம் நேரும் என்ற திகிலோ இல்லாதவர்கள்தான் தகுதியுடையவர்கள். அந்தக் கஷ்டங்களையும் நிலைமைகளையும் தைரியமாக எதிர்த்து நிற்க வேண்டுமென்றால், ஒழுங்குக் கட்டுப்பாடு, நப்பிக்கை, பொறுப்புணர்ச்சி பெருந்தன்மை ஆகிய குணங்கள் இருக்க வேண்டும்.

அத்தகைய பண்பை வளர்க்கும் ஒரு பட்டறைதான் ராஜஸ்தானில் மவுண்ட் ஆபூவிலுள்ள போலீஸ் கல்லூரி. அது பத்து வருஷமாகப் பணியாற்றி வருகிறது.

அங்கே இந்தியப் போலீஸ் சேவைப் பிரிவுகளிலுள்ள உயர்தர அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் ஒரே சேவை அங்கமாக உருவாக்கப்படுகிறார்கள். இதற்கு முன்னால் அப்பயிற்சிகள் எல்லாம் ராஜ்யவாரியாக நடைபெற்றன.

யூனியன் பப்ளிக் செர்விஸ் பரீட்சை மூலமாக, நாடு முழுவதிலுமுள்ள பல்வேறு பகுதிகளிலிருந்து ஆண்டு தோறும் தெரிந்தெடுக்கப்படுகிற 40, 50 ஆரம்பப் பயிற்சியாளர்களுக்கு வகுப்புப் பயிற்சியும், வெளிப் பயிற்சியும் உட்பட ஒரு வருஷப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து வாழ்கிறார்கள்; பயிற்சி பெறுகிறார்கள்; சாப்பிடுகிறார்கள்; உடற்பயிற்சி செய்கிறார்கள்; பொழுதைப் போக்குகிறார்கள். வெகு சீக்கிரத்தில் அவர்கள் எவ்வித வேற்றுமையில்லாத ஒரே கோஷ்டியாகிவிடுகிறார்கள். சென்னைவாசிகள், வங்காளிகள், பஞ்சாபிகள் என்பதை மறந்து அகில இந்திய போலீஸ் செர்விசைச் சேர்ந்த ஒரு கிளையின் அங்கங்கள் என்று உரைத் தொடங்குகிறார்கள்.

வகுப்பறைப் பயிற்சி

ஆரம்பப் பயிற்சியாளர்கள், கல்லூரியில் கிரிமினல் சட்டம், சட்ட நடைமுறை வைத்தியச் சட்டம் ஆகியவற்றில் பயிற்சி பெறுகிறார்கள் அவர்களுக்கு விரல் ரேகை, கால் ரேகை, ரத்தக்கறை முதலியவை மூலம் குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கான விஞ்ஞான முறைகளில் பயிற்சியளிக்கப்படுகிறது. கட்டிட நிர்மாண நுணுக்கங்கள் மோட்டார் யந்திர நுட்பம், போலீஸ் வயர்லெஸ் ஆயுதங்களின் நுட்பம், தரைப் படம் பார்த்து அறியும் பயிற்சி, பிரதேச அமைப்புப் படம் வரைதல் ஆகியவற்றிலும் அவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும்.

அப்பயிற்சியாளர்களுக்கு அனுபவப் பயிற்சிபெறுவதற்காக, ஜில்லாத் தலைமை நிலையங்களுக்குச் சென்று ஜில்லா நிர்வாக் வேலைகளைக் குறிப்பாகக் கிராமப் பிராந்தியங்களிலுள்ள போலீஸ் நடவடிக்கைகளைப் பற்றி நேரடியாகத் தெரிந்துகொள்வார்கள். அதற்குப் பிறகு ராணுவ நடவடிக்கை முறை வேலைகளிலும், கள நடவடிக்கை முறைகளிலும் பயிற்சி பெறுவதற்காக அவர்கள் ராணுவப் பிரிவுடன் இணைந்து கெள்வார்கள்.

தேகப்பயிற்சிக்கான எல்லாவிளையாட்டுக்களும் குதிரை சவாரியும் அப்பயிற்சித் திட்டத்தின் முக்கியமான அம்சமாகும். துப்பாக்கி, கைத் துப்பாக்கி,ப்ரென் பீரங்கி ஆகியவற்றைக் கையாள்வதிலும் அவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும். அவர்கள் தினசரி இரண்டு மனி நேரம் வீதம் உடலுழைப்பிலும் ஈடுபடுவார்கள். புல்தரையை வெட்டுவது,ரஸ்தா செப்பனிடுவது, வயல்களில் செய்வது வேலை ஆகிய கடின உழைப்புகளிலும் ஈடுபடுவார்கள்.

உடற்பயிற்சி அல்லது தொழில்நுட்பப் பயிற்சிக்காக மட்டிலும் அவர்கள் களத்துக்குச் செல்லவில்லை. தேசத்தின் அபிவிருத்தி வேலைகலையும் அவர்கள் நேராகக் காண்பதற்குச் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள். அவர்கள் வயல்களுக்கும் கோவில்களுக்கும் ஜல-மின்சார நிலையங்களுக்கும் ஆராய்ச்சிப் பிரயாணம் செய்வார்கள். தேசீய சர்வதேசீய முக்கியத்துவமுள்ள விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்காக மிகச் சிறந்த விரிவுரையாளர்களும் அக்கல்லூரிக்கு அழைக்கப்படுகிருர்கள். அவர்களின் விரிவுரைகள் முடிந்த பிறகு பயிற்சியாளர்கள் கல்லூரி நூல் நிலையத்திலுள்ள புஸ்தகங்கள், சஞ்சிகைகள், செய்திப் பத்திரிகைகள் ஆகியவற்றைப் படித்து அவை சம்பந்தமான தகவல்களை மேலும் தெரிந்துகொள்வார்கள்.

அவர்கள் ஆரம்பத்தில் அஸிஸ்டென்ட் போலீஸ் சூப்பரின்டெண்டாக நியமிக்கப்படுவார்கள். அவர்களுக்கு இப்பயிற்சிகளின் மூலம் சகோதர பிரஜைகளுக்குச் சேவைசெய்வதற்குத் தகுதி அளிக்கப்படுவதுமட்டுமின்றி ஒற்றுமை மனப்பான்மையும் எவ்வளவோ அபாயமும் கஷ்டமும் நிறைந்த கட்டத்திலும் கடமையைத் துணிந்து செயலாற்றும் பண்பும் உண்டாகிறது.

# உவமை

ல. சண்முகசுந்தரம்

வெவ்வேறு வகைப்பட்ட இரண்டு பொருளிடத்தும் உள்ள சூட்சும ஒற்றுமையை எடுத்து, அவ்வொற்றுமை காரணமாக அவ்விரண்டு பொருளும் ஒன்றேஎன ஒரு வரிசைப்படுத்துவதுதான் உவமை.

கவிஞனுடைய பரபரப்பையும் விசாலத்தையும் அடக்க ஒடுக்கமாகவும் கண்ணியமாகவும் எடுத்துக் கூறும் ஒரு சிறந்த ஆயுதந்தான் உவமை என்று சொல்லப் படுவது.

வார்த்தைக்குள் அடங்காமல் அப்படியும் இப்படியுமாகச் சிதறிப் போகும் விஷயங்களை எல்லாம் உணர்ச்சிப் பெருக்கின் காரணமாக வழி தவறியும் திசைமாறியும் உடைபட்டுச் சிந்துகின்ற குண அசைவுகளை எல்லாம் ஒரு வரிசைப் படுத்தியும் கோர்வையாக்கியும் பிட்டு வைத்தாற்போலப் பிடித்துக் காட்டுவதுதான் இந்த உவமையின் தொழில்.

சுருக்கமாகச் சொல்லப்போனல் இதைக் கவித்வத்தின் உயிர்நாடி போன்ற சிறந்த உறுப்புக்களில் ஒன்று என்ருவது, கவிஞனின் தலைசிறந்த ஆயுதம் என்ருவது இதனைப் பெயரிட்டு அழைக்கலாம். இதனல்தான் விமரிசன உலகத்தின் ஆதிதேவனகக் கருதப்படும் அரிஸ்டாட்டில் (Aristotle) என்பவர், "உவமை என்பது எடுக்க எடுக்கக் குறையாத அம்புருத்தூணி" என்று கூறினர்.

"மரம்மாதிரி வளரத்தானடா செய்தே." இந்த வாக்கியத்தில், ஒவ்வொருநாளும் உடல் வளர்ச்சியிலே முன்னேறிக் கொஞ்சங்கூட உலகியலறிவோ—எதிரி சொல்லும் சொற்பொருளின் போக்கோ தெரியாதபடிக் குப் பேந்தப் பேந்த விழிக்கும் கலியுகப் பிரஹிருதியின் விபரீதப் போக்கை—அவனோடு சம்பந்தப்பட்ட ஒருவன் வெளியிடும்பொழுது, அவனுக்கும் தனக்கும் உள்ள தொடர்பையும், அவன் அதிசயப் போக்கால் விளைந்து வருகின்ற தொடர்பின்மையையும், அவன் அறியாமையா லும் அசட்டுத் தனத்தாலும் ஏற்படுகின்ற உள்ளக் குமட் டலையும் "மரம்மாதிரி வளரத்தானடா செய்தே" என்ற வாக்கியத்திலுள்ள "மரம்" என்கிற உவமை பிடித்துக் காட்டுகிறது.

இப்படியாக உவமானத்திலிருந்து (ஒப்புமை சொல்ல வரும் வாக்கியத்திலிருந்து) உவமேயத்தி (உவமிக்கப் படும் பொருளி) னுடைய நன்மை தீமைகள் அத்தனை யையும் நாம் தெரிந்து கொள்ளலாம். இனி, ஒரு பாத் திரத்தின் குண சம்மந்தமான சுவை வேறுபாடுகளையும் உணர்ச்சிப் பிரிவுகளையும் புலப்படுத்துவதற்கு உவமை யைப் போல வேறொரு சாதனமும் கிடையாது.

தெங்குண்ட தேவைப் படுவழிப் பட்டேன்யான்
எங்கோன் வளவன் திறந்து

இந்த முத்தொள்ளாயிரப்பாடல் காதலுள்ளத்தின் பரிதாபகரமான அனுதித் தன்மையை விளக்கிக்காட்டு கிறது.

"அவனோ போகிற போக்கில் ஏறிட்டுக்கூடப் பார்க்க மாட்டேன் என்கிறான். அன்னையோ அவ்வோடு எனக்கு இல்லாத உறவை எல்லாம் உண்டென்று சொல்லிப் படாதபாடு படுத்துகிறாள். இதற்கு நான் என்ன

செய்ய?' என்கின்ற உள்ளப் பொருமலை, தேங்காயை உண்டு விட்டதாகப் பழி கூறப்படும் தேரையின் நிலைமையோடு ஒட்டித்தானே சொல்ல வேண்டி இருக்கிறது? அப்படிச் சொன்னதினுல்தான் அவனுடைய அவலச் சுவை முழுவதையுமே நம்மால் உணரமுடிகிறது. இனி,

மேகந்தனி வருகின்றது மின்னுடெனை மிளிர்பூண்
நாகந்தனி வருகின்றது பிடியோடெனை நடவா

என்று வருகிற ஒரு பாடலைக் கவனிப்போம். இதில் யாதொரு விதமான கவலையுமின்றி வன வனுந்திரங்களின் வழியாகச் சீதையோடு நடையின் பெரு மிதத்தை உவமையின் மூலமாகவே நாம் பரிபூரணமாகப் பார்க்க முடிகிறது.

இப்படியாகச் சுவைப் பொருள்களை விளக்கிக் காட்டுவதற்கும்,—பெரும்பாலான—குறிப்பிட்ட கட்டங்களில் சொல்ல வேண்டிய விஷயத்தின் தன்மையை அதற்குரிய உணர்ச்சியின் பரிமாணத்தில் குறைவிழாதவாறு வாசகனின் இதயத்தில் குடியேற்றுவதற்கும் உவமையைப் போன்ற சிறந்த சாதனத்தை இலக்கியம் இதுவரை கண்டதில்லை, இனிக்காணவும் முடியாது என்று தலை சிறந்த அறிஞர்கள் எல்லோருமே ஒப்புக் கொள்கிருர்கள். உதாரணமாக,

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

என்ற திருக்குறளை எடுத்துக் கொள்ளுவோம். இதில், இப்படி என்று அளந்து கூறமுடியாத விருந்தினுடைய மென்மைத் தன்மையையும், கணந்தோறும் மாறும் அதன் உணர்ச்சிப் பிரிவுகளையும், அனிச்சப் பூவைக் கொண்டும் அதன் குணத்தைக் கொண்டுந்தானே விளக்கவேண்டி இருக்கிறது.

இப்படி வெவ்வேறு வகைப்பட்ட பொருள்களின் அடித்தளத்திலே மறைந்து கிடக்கும் ஒற்றுமைத் தத்துவங்களை எடுத்து அவற்றைத் துலாம்பரப்படுத்திக் காட்டுகின்ற உவமைகளை இதுவரை பார்த்தோம், இதிலே கவிஞனுடைய இதயானுபவமான ரசவேறு பாடுகளையும்-சுவை வேறுபாடுகளையும் ஒரு குறிப்பிட்ட கோலத்தில் கேந்திரப்படுத்தி நிலை நிறுத்துவதற்குக் கவிஞனின் கைகண்ட ஆயுதமாய் இருப்பது இந்த உவமைதான் என்பதையும் அறிந்து கொண்டோம்.

இதன் மூலமாக நாம் தெரிந்து கொள்ளவேண்டிய முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. அதாவது ஒரு தத்துவத்தின் அனுபவ உண்மையை வெளியிடுகின்ற கவிஞன் அதன் பெருமையையோ சிறுமையையோ அல்லது அவ்விரண்டையுமோதான் எடுத்துக் கூற முற்படுகின்றான். அச் சமயத்தில் அதே தத்துவத்தைத் தன்னந்தனியாக வைத்து விஸ்தாரம் பண்ணுவதைவிட ஓர் உவமை மூலம் தொட்டுவிடுவதுதான் அதை இன்னும் துலாம்பரப்படுத்திக் காட்டிவிடுகிறது. ஆகவேதான் சுவை வேறுபாடுகளை எல்லாம் அலங்காரப்படுத்திக் காட்டிவிடுவதோடு திருப்தி அடையாமல் எந்த விஷயத்தினுள்ளே பதுங்கிக் கொண்டு எந்த விதமான உண்மை கவிஞனுடைய இதயத்தை உறுத்துகிறதோ, அந்தவிதமான உண்மையைத்தான் உவமை யானது துலாம்பரப் படுத்த முற்பட்டு வரவேண்டும். அதாவது, ஒரு தத்துவ உண்மையின் பெருமை சிறுமையின் அடி முடிகளை எல்லாம் தொட்டுவிடுவதையே தன் குறிக்கோளாக வைத்திருக்கவேண்டும். இதனால்தான் உவமையைப் பற்றிக் கூறவந்த தொல்காப்பியனார் உவமையானது,

பெருமையும் சிறுமையும் மெய்ப் பாடெட்டின்
வழிமருங்கறியத் தோன்றும் என்பு

என்றும் இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்
உவமமருங்கில் தோன்றும் என்ப

என்று சொல்லிப் போனர்.

இயற்கையான, தெளிவான உவமைகளைச் சங்க இலக்கியங்களில் மிகுதியாகக் காணலாம். அவை ஒவ்வொன்றும் பொருளின் ஒரு குறிப்பிட்ட அம்சத்தைத் தொட்டுவிட்டு அதிசயிக்கத் தக்கவாறு அமைத்து விடும். இயற்கைப் பொருள்களின் பல்வேறு வகைப் பட்ட வடிவங்களையும் குணங்களையும் புகைப்படம் எடுத்தாற் போலத் தெள்ளத் தெளியக்காட்டி நிற்கும். ஆனல் ஒன்று, உணர்ச்சிகளை ஒன்ருேடொன்று மோத விட்டு அந்தப் போராட்டங்களிலே ஏற்படுகின்ற அகண்டாகாரமான பரிபூரணத்தை உவமையின் மூலமாகத் தேக்கிப் பிடிப்பதையோ நிலைநிறுத்துவதையோ இவைகளில் பார்க்க முடியாது.

அதுபோக இந்தச் சங்க இலக்கியங்களின் பின்னலே தோன்றிய மணிமேகலை, சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி முதலிய தொடர்நிலைச் செய்யுள்களிலும் நீதி நூல்களிலும் சரி, ஒரு குறிப்பிட்ட அம்சத்தை இழுத்துப் பிடித்து வெளியே காட்டுகின்ற அதிசய உவமைகளைத்தான் பார்க்க முடிகிறதே ஒழிய மேலே குறிப்பிட்டமாதிரி உவமைகளைக் கொண்டே கட்டுமீறித் திமிறுகின்ற விஷய தத்துவங்களை எல்லாம் அடக்கி ஆண்ட, தனித்தனியான உவமை உலகங்களைப் பார்க்க முடிகிறதில்லை. உதாரணமாக,

நுரைமுகந் தன்ன தென்பூஞ் சேக்கை
கல்பொரு சிறு நுரைபோல
மெல்ல மெல்ல இல்லாகுதுமே

ஞாயிற்றின் முன்னர் இருள்போல மாய்தேன்
ஆயிழை மேனி பசப்பு

என்று வருகின்ற இந்தச் சங்க இலக்கியங்களின் குறிப்பிட்ட உவமைகளைப் பாருங்கள். இவை ஒரு குறிப்பிட்ட உண்மையை அல்லது ஒரு நிலைமை காரணமாகச் சந்தர்ப்பக் கோளாறால் ஏற்பட்ட மன உளச்சலை எவ்வளவு தெள்ளத் தெளிய விளக்கவேண்டுமோ அவ்வளவு தூரம் விளக்கி விடுகிறது. ஆனால் இந்திரஜித்து இறந்து போன செய்தியைக் கேட்ட உடனே கூந்தலும் சேலையும் அவிழ்ந்து பின் தொடர நினைப்பில்லாமலே அவற்றைப் தடித்திழுத்துக் கொண்டு, அரண்மனையிலிருந்து அப்படியே அலறிப் புடைத்து ஓடிவந்து மகன் மேலே விழுகின்ற மண்டோதரியை,

கோலையின் மேற்றுறிந்த வேடன்
கூர்ங்கணை உயிரைக்கொள்ள
மலையின் மேன் மயில் வீழ்ந்தென்ன
மைந்தன் மேன் மறுகி வீழ்ந்தாள்

என்று குறிப்பிடுகின்றான் அல்லவா? இதிலே வருகின்ற உவமை அதாவது வேடனால் அடிபட்டு மலையிலே உருண்டு உருண்டு வாழுகின்ற மயிலைக், கம்பன் இந்த இடத்திலே மண்டோதரிக்கு உபமானமாகக் கூறுகின்றான். இதன் மூலமாக அவள் மகன் மேல் விழுந்ததை மாத்திரம் நாம் பார்க்கவில்லை. மைந்தனைப் பறிகொடுத்த துக்கரமான செய்தியைக் கேட்டவுடன் அவள் அடைந்த பரபரப்பு, பரிதாபம், நிலையற்ற தன்மை இத்தனையையும் பார்த்து விடுகின்றோம்.

இதே மாதிரியான விஷயப் பரப்புகளை யெல்லாம், மன அவசத்தின் அகண்டாசாரமான பரிபூரணங்களை

யெல்லாம் அச் சங்ககால உவமைகளில் தேக்கிப் பிடித்த தாகத் தெரியவில்லை. இதனுல்தான் தனிப்பட்ட அம் சங்களை யெல்லாம் விசாலப்படுத்திச் சொல்லுவதாக இருந்தாலும், சங்க கால உவமைகளை இளமைப் பருவத் திலே உள்ளன வென்றும் பக்குவமடையாதன வென்றும் சொல்லவேண்டியிருக்கிறது.

இதுபோக இன்னெரு விதமான உவமையும் இச் சங்க கால இலக்கியங்களில் காணலாம். அவற்றில் ஒரு விதமான மறுப்பும் அதன் மூலமாக ஒரு ஹாஸ்யமும் தென்படுகிறது. அதாவது, எதிரி சொல்லும் சொற் பொருளுக்கு உடன்படுவதுபோலப் பாசாங்கு பண்ணித் தன் மறுப்பை உவமையின் மூலமாகக் காட்டிவிடு வதையும் இச்சங்க இலக்கியங்களிலே காணலாம். இந்த மறுப்பிலே சிறந்த ஒரு ஹாஸ்யச் சுவையையும் காண லாம். இது பெருமையையும் சிறுமையையும் அடிப்படை யாகக் கொண்ட அற்புதச் சுவையையே பெரும்பாலும் தனக்கு ஆதாரமாகக் கொண்டு வருகிறது. இதனுலேயே இந்த உவமையைப் பழைய உரை ஆசிரியர்கள் அற்புத உவமை என்றே பெயரிட்டுள்ளனர். உதாரணமாக, 'என்னை ஏமாற்றி விட்டானே' என்று குறை கூறிய நாயகி இடத்து தோழியானவள், 'உன் நாயகன் உன்னை எப் பொழுதும் ஏமாற்றமாட்டான்' என்று சமாதனம் கூறு மிடத்து,

பொய்த்தற் குரியனே பொய்த்தற் குரியனே
குன்றகல் நல்நாடன் வாய்மையுள் பொய்தோன்றின்
திங்களுள் தீத்தோன்றி அற்று

என்று கூறுகிருள். 'உன் நாயகன் வார்த்தைகளில் பொய் இருக்குமானுல் சந்திர மண்டலத்தில் தீப்பிடித்து எரிவது போலத்தான்' என்ற அவள் பதிலில் மறுப்பும்

ஹாஸ்யமும் மிகத் தெளிவாகத் தெரிகின்றன. அவள் இவ்வளவு அலட்சியமாக மறுப்பதை உவமை அந்தப் பருவ உணர்ச்சி குறையாமல் படம் பிடித்து விடுகிறது.

இனிச் சங்க இலங்கியங்களில் இரண்டுவிதமான உவமைகளைப் பார்க்கலாம். அவைகள் சங்க இலக்கியத்தோடு ஒடுங்கி விடாமல் கொஞ்சங் கொஞ்சமாகப் பிற்கால இலக்கியங்களிலும் தவழ்ந்து வந்திருக்கின்றன. அவை குறிப்பிட்ட அம்சத்தை உணர்த்துவதில் அவ்வளவாகக் கருத்தைச் செலுத்தாமல் புறம்பான விஷயங்களை உணர்த்தும் பிரசாரக் கருவியாகவே இருக்கின்றன.

உதாரணமாக நாயகிமார்களுடைய அழகு முதலியவற்றை வருணிக்கவேண்டிய கட்டங்களில் பண்டைக் காலத்திய சாம்ராஜ்யத் தலைநகரங்களையே உவமையாக எடுத்தாளப்பட்டது ஒன்று. இதற்கு உதாரணமாக,

பிண்ட நெல்லின் அள்ளூர் அன்ன என்
ஒண்டோடி நெகிழினும் நெகிழ்க
தொண்டி அன்ன இவள் நலந்தந்து

என வருகின்றவற்றைக் காட்டலாம். இவை "தில்லை அன்னாள்" என்ற மாணிக்க வாசகர் பாடலையும், "வைகுந்தம் அன்னாள்" என்ற நம்மாழ்வார் பாடலையும் மேலே வருகின்ற சங்க இலக்கியங்களோடு இந்த உவமை ஒட்டி வந்ததை உதாரணப்படுத்தலாம்.

இனி, இரண்டாவதாக, அருவருக்கத்தக்கபடியும் ஒதுக்கித் தள்ளும்படியும் வருகின்ற ஓர் உவமையைப் பார்க்கலாம். இது குறிப்பிட்ட பொருளைக் குறிப்பிட்ட உவமை மூலம் சட்டென்று சொல்லிவிடாமல், முகத்தைச் சுற்றி மூக்கைத் தொடுவதுபோல உவமானத்திலிருந்து அந்த இடத்திற்குரியவன், அவனுடைய கொடை வீரம்

முதலிய வாழ்க்கை வரலாற்றுகளை எல்லாம் வரிசை குறை யாமல் வியாக்கியானம் செய்து, அப்பேர்ப்பட்ட அரசனு டைய அப்பேர்ப்பட்ட இடத்திலுள்ள......அப்பேர்ப்பட்ட .........(தைப்) போன்ற...என்று தலைகால் தெரியாமல் சொல்லுவதுதான் அந்த உவமையின் தொழில்.

உதாரணமாக, 'உன் நாயகியினுடைய நெற்றி மணங்கமழுகின்ற புதுப்பூவை ஒத்த இளமையும் செவ் வியும் நிறைந்தது' என்று தலைவனிடத்தில் அறிவுறுத்து கின்ற தோழியானவள், 'மலர்போல மணக்கும்நெற்றி' என்றுநேர்முகமாகச் சொல்லிவிடாமல்

உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபலன் சூழசேய்நின்று
செழுஞ்செய் நெல்லின் விளைக்கதிர்கொண்டு
தடந்தாள் ஆம்பல் மலரோடுகூட்டி
யாண்டுபல கழியவேண்டுவயின் பிழையாது
ஆளிடூஉக் கடந்த வாளமர் உழக்கு
ஏந்துகோட்(டு)யானை வேந்தர் ஓட்டிய
கடும்பரிப் புரவிக் கைவன்பாரி
தீப்பெரும் பைஞ்சுனை பூத்த
தேங்கமழ் புதுமலர் நாறுமிவள் நுதலே

என்று சொல்லுகிருள். இதில் இவள் நுதலானது புது மலர்போல மணங் கமழும் என நிறுத்திவிடாமல், அந்த நெற்றிக்கு உவமையாக வந்த புதுமலரைப் பூத்த பைஞ் சுனையையும்,அச்சுனைக்கு அதிபனுகிய பாரி, அவனுடைய வாழ்க்கை வரலாறு எல்லாவற்றையுமே ஒன்று கூட்டி வெறும் படாடோபமும் டாம்பீகமும் கலந்த சொல் விளை யாட்டைச் சொல்லவேண்டாமே. இப்படி எல்லாம் சுற்றி வளைத்துச் சொல்லுவதால் உவமையும் விஷயத்தையும் பொருத்திக் காண்பித்த கவிஞனுடைய ஆற்றல் முதலான வற்றையோ உவமையினின்றும் பொங்கி வருகின்ற

தொடர்பு பற்றிய சூக்கும ரகஸ்யங்களேயோ தெரிந்து கொள்ளாமல் போய்விடுகிறது; அனுபவிக்க முடியாமலும் போய்விடுகிறது.

இப்படி எல்லாம் உவமையைச் சுற்றிச் சுழன்ருட விட்டு வேடிக்கை பார்க்கின்ற தன்மை சில ஆங்கிலக் கவிகளுடத்திலும் உண்டு. அவற்றை எல்லாம் சந்திக் கிழுத்து விவகாரம் பண்ணுகின்ற காலத்தில், ஹோமர் (Homer) என்கிற கிரேக்க மஹாகவியும் இப்படியே உவமைகளேச் சில இடங்களில் கையாண்டுயுள்ளார் என்று சப்பைக் கட்டுக் கட்டித் தப்பித்துக் கொள்ளு கிருர்கள். அது எப்படி இருந்தாலும் இந்த உவமைகள் குறிப்பிட்ட பொருளின் அனுபவ உண்மையை உணர்த் துவதற்குப் பதிலாக எதை எதை எல்லாமோ பட்டியல் தயாரித்துக் கொடுக்கும் விளம்பர இலாகாவாகத்தான் இருக்கிறதே ஒழிய வேரென்றும் இல்லே.

நம் உணர்ச்சியைத் தூண்டிவிட்டு ரசபாவனே களோடு இலக்கிய நயங்களிலும் கலேயரங்குகளிலும் உல்லாசமாக உலாவவிடுகின்ற உவமைகளேப் பார்த் தோம். இனி, நம்முடைய பாவனுசக்திகளே எழுப்பி அதி அற்புதமான லட்சிய உலகங்களேயும் கனவு உலகங்களே யும் நம் கண்முன்னுலேயே சிருஷ்டித்துக் காட்டி விடு கின்ற உவமைகள் உண்டா என்பதைப் பார்க்கலாம். இந்த உவமை விஷய தத்துவத்தின் அகண்டாகாரமான பரிபூரணத்தை இழுத்துப் பிடிக்கிறது; தன் கட்டுக்குள் தேக்கி நிறுத்துகிறது. சுருக்கமாகச் சொல்லப் போனுல் இந்த உவமையால் சுண்டி இழுக்கப்பட்ட விஷயப்பரப்பு ஆயிரம் பாட்டுக்களால் பாடப்பட்டாலும் அடங்காததாய் நமக்குத் தோன்றவேண்டும். அப்படித் தோன்றிய அந்தப் பூரண விசாலம் கவிஞன் கையாண்ட அந்த ஓர்

உவமைக்குள் தன் பரிபூரண தத்துவத்தோடு அடங்கி மிளிர வேண்டும். அத்தனை அடக்க ஒடுக்கத்திற்கும்—கட்டுக்கோப்பிற்கும்—அந்த ஓர் உவமையே காரணகர்த்தாவாய் விளங்கவேண்டும். இப்படி எல்லாம் சொல்லி விடுவதற்கு (வெறும்)வார்த்தை அலங்காரங்களோசொல் விளையாட்டுகளோ வேண்டியதில்லை. அதற்குப் பதிலாக இந்த உவமையைக் கையாளும் நிலைக்களத்தில் எவ்வளவுக் கெவ்வளவு விஷயத் தெளிவும் தன்னடக்கமும் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவுதான் இந்த உவமை சோபிக்க முடியும்.

உதாரணமாக, விசுவாமித்திரன் பின்னே புறப்படுவதற்கு யுத்த சன்னத்தனுகும் இராமனை,

வென்றி வாள்புடை விசித்து மெய்ம்மைபோல்
என்றும் தேய்வுருத் தூணியாத்திரு
குன்றம் போன்றுயர் தோளில் கொற்றவில்
ஒன்று தாங்கினன் உலகம் தாங்கினன்

என்கின்றூர் கம்பர். எடுக்க எடுக்கக் குறையாத ராமனுடைய அம்பருத் தூணியைப் பற்றி எத்தனை பாட்டுப் பாடினுல்தான் என்ன? அடங்குமா? சத்தியத்தைப் போல ஊழி ஊழி காலத்திற்கும் குறைவற்றது, அழிவற்றது, மங்காதது என்று சத்தியத்தோடு உவமித்தால் தானே அது தன் பரிபூரண நிலைகள் எல்லாம் துலங்கும்படி சிறகொர்டுக்கிப் பிரகாசிக்கும்.

இதே போலத்தான் அரசுரிமைகளை எல்லாம் இழந்து விட்டு காட்டு வழியே நடந்து வருகின்ற ராமனுக்குச் சந்திரோதயக் காட்சி எப்படி இருக்கிறது என்பதைக் கவிஞனுடைய இதயானுபவத்தோடு பாருங்கள்.

தருமத்தின் வதனம் என்னப் பொலிந்தது
தனிவெண் திங்கள்

இப்படி அல்லவா சந்திரோதயம் காட்சி கொடுக்கிறது?

மேலே குறிப்பிட்ட பாடல்களில் அப்படி ஒன்றும் உவமானத்தையோ உவமேயத்தையோ அலங்காரப் படுத்திவிடவில்லை. அப்படி இருந்தும் இந்த உவமைகள் பல்வேறு வகைப்பட்ட இந்திர ஜாலக் கனவுகளை எல் லாம் எழுப்பத்தானே செய்தன. விதவிதமான ரகஸ்ய உலகங்களைக்கூட சிருஷ்டிக்க வில்லையா?

இதைத் தவிர கம்பனிடத்திலே இன்னொரு வித மான உவமையும் உண்டு. அது விஷயதத்துவத்தின் அகலத்தை மாத்திரம் பரிபூரணப் படுத்தாமல் அதனு டைய ஆழ நீளங்களை எல்லாம் அளந்து காட்டும். அப்படி அளந்து காட்டுவதற்கு ஒரு விஷயத்திற்கு இரண்டு உவமானங்களைக் கையாள வேண்டி இருக் கிறது. அந்த இரண்டு உவமைகளும் தங்களுக்குள் ஒன்றோடொன்று முரண்பட்ட தத்துவங்கள் இரண் டையும் எடுத்துக் கொண்டு அவைகளின் ஒற்றுமை யைப் பற்றி ஒரு சிறிதும் கவனிக்காமல்-வியாக்கியானம் பண்ணுமல்—உவமேயப் பொருளோடு சப்தமில்லாமல், ஒரு முடிச்சைப் போட்டு விடுவதுதான் இந்த உவமையின் பெருமிதத்திற்கு ஓர் அடையாளம். உவ மேயம் (இரண்டு) உவமானம் ஆகிய இந்த மூன்றி னுடைய ஒற்றுமைக்கும் கவிஞன் ஒருவித விளக்கமும் தரக்கூடாது. ஆனுல் அவற்றைத் தனித் தனியாகச் சிறிது விளக்கலாம். அதாவது, அவற்றின் சொந்தக் குணங்களைச் சொந்தமான முறையில் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். இப்படியாகப் பரிபக்குவப் பட்டுவருகின்ற இந்த உவமையை எனக்குத் தெரிந்த வரைக்கும் கம்பன் ஒருவன்தான் கையாண்டு வெற்றி பெற்றிருக்கின்ருன். உதாரணமாகப் பாலைவனத்தின் வெப்பத்தை அதன் ஈரப் பசையற்ற நிலையைப் புலப்படுத்தவேண்டிய இடத்தில்,

தாவரும் இருவினை செற்றுத் தள்ளரும்
மூவகைப் பகையரண் கடந்து முத்தியில்
போவது புரிபவர் மனமும், பொன்விலைப்
பாவையர் மனமும் போல் பசையும் அற்றதே

என்று கூறிவிடுகின்றான். முனிவர்களுக்கும் விலை மாதர்களுக்கும் ஒட்டா அல்லது உறவா ஒன்றுமே இல்லை. இருந்தாலும் வேறு வேறுவகைப்பட்ட இந்த இரண்டு துருவ மூலைகளையும், பாலைவனத்தின் பசையற்ற தன்மையைத் தெரிவிக்கும் ஒரு நிலைக்களத்தில் வைத்து ஒன்று கூட்டி, ஆரவாரமில்லாமல் அவற்றை ஒரு நிலைப்படுத்தி விடுகிறான் கம்பன். இப்படிப்பட்ட அசாதாரண உவமைகளை எல்லாம் கம்பன் ஒருவனிடம்தான் கண்டு தெளிய முடியும். ஆகவே இத்தகைய உவமைகளுக் கெல்லாம் "கம்ப உவமை" என்று நாம் தாராளமாகப் பெயர் வைத்து விடலாம்.

இனி அடுத்தபடியாகச் சங்க இலக்கியங்களிலே மிகுதியாகப் பழக்கப்பட்டு வந்திருக்கின்ற ஓர் உவமையைப் பார்க்கவேண்டும். அதாவது முதலில் எடுத்துச் செல்லப்பட்ட ஒரு விஷயமே பின்னால் வருகின்ற விஷயக் கருத்திற்கு அனுசரணையாக இருந்து கொண்டு தானே ஓர் உவமானப் பொருளாக மாறித் தன்னை உணர்த்தாமல் தன் மூலமாகத் தெரியப்படும் இன்னொரு விஷயத்தை உணர்த்துவது. இதை உள்ளுறை உவமை என்று சொல்லுவார்கள். இதனுடைய முக்கிய நோக்கம் வெளிப்படையாகச் சொல்ல முடியாத விஷயத்தைத் தெரியப்படுத்துவதுதான். இது சங்க இலக்கியங்களில் அகப் பொருளைப் பற்றிய இடங்களிலேயே கையாளப் பட்டு வந்துள்ளது. அது போக வருணனைப் பொருள் களிலேதான் இந்த உள்ளுறை உவமைகள் அமைக்கப் பட்டுள்ளன. தத்துவங்களைப் பற்றிப் பழமொழிகளாகவும்

சிறுகதைகளாகவும் இந்த உள்ளுறை உவமைகள் வேற்று நாட்டாரால் கையாளப்பட்டு வந்திருந்தாலும் தமிழிலுள்ள உள்ளுறை உவமைகளைப் போல குறிப்பிட்ட விஷயத்தைக் குறிப்பிட்ட கோலத்தோடு, சட்டென்று சொல்லிவிடுவதாக அவை இல்லை. ஆகவேதான் தமிழ் மொழியிலுள்ள உள்ளுறை உவமைகளைப்போல உலகத்தில் வேறெங்குமே கிடையாது என்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் இது ஒன்றையே கொண்டு மனத் திருப்தி அடைந்துவிட முடியாது. ஏனென்றால் ஒப்புவமையற்றுத் திரியும் இவ் உள்ளுறை உவமையில் எத்தனையோ குறைபாடுகள் உள்ளன.

ஆகவே நமக்கு நடை பாவாடை போட்டுக் கொடுத்துள்ள இந்த உள்ளுறை உவமைகளை இன்னும் திருத்தி வைத்துக் கொண்டு நன்றாகப் பக்குவப்படுத்திப் பல உண்மைகளையும் உணர்த்துவதற்கு அவற்றைச் சாதனமாக்கிக் கொள்ளவேண்டும்.

---

Edited, Printed and Published by A. K. CHETTIAR at Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18.

# கவுண்டர் & கம்பெனி
## (பிரைவேட்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்:
கூட்ஸ் ஷெட் ரோடு
பொள்ளாச்சி.

கிளை ஆபீஸ் & ஷோரூம்
7/69, ஜெயில் ரோடு
கோயமுத்தூர்

## கோயமுத்தூர் & நீலகிரி ஜில்லாக்களுக்கு:

டாடா-மெர்சிடெஸ்-பென்ஸ் டிசல் டிரக்,

ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிள்

விற்பனையாளர்கள்.

---

**நா. மகாலிங்கம், B.Sc., A.M.I.E., M.L.A.,**

மானேஜிங் டைரக்டர்.

KUMARI MALAR REGD.NO. M. 4819

டெலிபோன் 51 & 111 தந்தி "BLISS"

# இராஜபாளையம் மில்ஸ் லிமிடெட்

## இராஜபாளையம்

யோகம்

டிரேட் மார்க்

யோகம்

**மொத்தக் கதிர்கள் 24,996 + 11,040**

உயர்ந்த ரக 20, 26, 60, 80 கோமுடு பாவு
நூல்கள் உற்பத்திசெய்கிறோம்.

---

மானேஜிங் ஏஜண்டுகள்:

**ராம்கோ ஏஜென்ஸீஸ் பிரைவேட் லிமிடெட்**

**இராஜபாளையம்**

மானேஜிங் டைரக்டர்
P. A. C. ராமசாமி ராஜா

Keeman